# புதிய உலகம்



தை-மாசி

1980

## தமிழர் பண்பாட்டுச் சிறப்பு மலர்

# புதிய உலகம்

நான்காவது ஆண்டு
மலர் — 19
தை — மாசி 1980

பொறுப்பாசிரியர்
யே. நிக்கிலஸ்

துணை ஆசிரியர்
நாவண்ணன்

விநியோகப் பொறுப்பாளர்
பிரான்சிஸ் டானியேல்

வெளியீடு
இங்ஙனம் சுவாம்பிள்ளை

தொடர்பு
" புதிய உலகம் "
த. பெ. எண் 2
யாழ்ப்பாணம்

"PUTHIYA ULAGAM"
P. O. Box 2,
Jaffna.

உங்கள் படைப்புகள்
அனைத்தையும்
15-3-80 க்கு முன்
அனுப்பிவையுங்கள்.

விலை ரூபா 1-00 ஆண்டுச் சந். 6-00

சிந்தனையூட்டும் சஞ்சிகை

## புதிய உலகிலே

| | பக்கம் |
|---|---|
| எமது பார்வை ... | 1 |
| அட்டைப்பட விளக்கம் ... | 4 |
| தமிழர் பண்பாட்டில் வெற்றிலை ... | 5 |
| பண்... பாடு .. | 9 |
| தமிழா சிந்தித்துப்பார் ... | 10 |
| குறுக்கெழுத்துப்போட்டி இல, 10 ... | 12 |
| தமிழ்மொழியின் தன்மை | 18 |
| தமிழர் பண்பாடு ... | 17 |
| மண்ணிலும் முளைக்கும் நட்சத்திரம் ... | 19 |
| தமிழர் பண்பாட்டை... | 24 |
| தனிநாயகம் அடிகள் பேட்டி | 29 |
| புதுமைப்பெண் ... | 36 |
| கருத்து மோதல் ... | 38 |
| பொங்குமா பொங்கல் ... | 44 |
| அமெரிக்க அனுபவங்கள் ... | 50 |
| புதுமைப் பதில் ... | 57 |
| உங்கள் பார்வை ... | 59 |

படைப்புகளுக்குப் பொறுப்பு படைத்தவர்களே
கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே ஆ—ர்.
(FOR PRIVATE CIRCULATION ONLY)

NADA. TAMILARASHY

# எமது பார்வை

## நாம் தமிழர்களா ?

ஏன் இந்தக் கேள்வியென்று வியப்படையலாம் பலர் ! அல்லது சிரிக்கலாம் சிலர் ! ! தமிழ்ப் பண்பாட்டின் பெருமையைப் புரியாது மேல்நாட்டு நாகரீகத்தை நாடி, தம் சொந்தப் பண்பாட்டை ஏளனம்செய்யும் எட்டப்பர் கூட்டம் நம் மத்தியில் வாழும்போது இக்கேள்வி எழத்தான் செய்கிறது. தம் மொழியின் அழகும் புகழும் விளங்காது, மொழிப் பற்றும், இனப்பற்றும் அற்று பொருள்பற்று மட்டும் உடையவர்கள் தமிழர்களா ?

## அன்பும் அறமும்

வடபகுதி மக்களுக்குப் புத்த தர்மத்தை எடுத்துக் கூறுங்கள் என்று நம்நாட்டு ஜனாதிபதி பௌத்த குருக்களை வேண்டுமளவுக்கு நாம் தரம் குறைந்துவிட்டோமா ? பண்டைக்காலத்தில் தமிழன் போற்றிவந்த அன்பையும் அறத்தையும்விட வேறு எதைத்தான் அவர்கள் எமக்குப் போதிக்கப்போகின்றார்கள் ?

## தன்னிகரில்லாத் தனிச் சிறப்பு

தமிழன் என்னும் ஓர் இனம், மொழி, வரலாறு இருப்பது மட்டுமல்லாமல் தமிழ்நாடு என்று பெருமைகொள்ளும் அளவுக்கு நீண்டதொரு வரலாற்றை இந்தியாவில் உருவாக்கியுள்ளது. தமிழன் என்றும் அழியாப் புகழோடு வாழ வேண்டுமென்று விரும்பியே தமிழ் ஈழம் என்ற கோரிக்கையும் நம்நாட்டில் உருவாகியுள்ளது.

## நாம் துரோகிகளா ?

தமிழன் என்று சொல்லித் தலைநிமிர்ந்து நிற்கவும் துணிவின்றிப் போவது மட்டுமல்லாமல் மொழிவேண்டாம்—பதவி போதும், உரிமை வேண்டாம்—உத்தியோகம் போதும் என்று வாழ்வோரை நாம் எப்படி அழைப்பது ? மாத்திற்கொப்ப நிறம்மாறும் பச்சோந்திகள் இவர்கள். சொந்தப் புகழை விரும்பிச் சொற்பகாலச் செல்வாக்கைப்பெற தம் இனத்

தையே காட்டிக்கொடுப்போரும், தம்மொழி, கலை, கலாச் சாரத்தை இழக்கவும் துணிவோர் துரோகிகள்தானே.

## இறைவனின் அமைப்பு

மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்டதொரு நாடு, இனம், மொழி, கலை, பண்பாட்டுக்கு உட்பட்டே வாழ்கின்றான். இவற்றின் ஊடாகவே அவன் மனித உருவைப் பெற்று முழுவளர்ச்சியை அடைகின்றான். தனி மனிதன் அடையும் புகழ் அவனது நாட்டுக்கும் மொழிக்கும் பண்பாட்டுக்குமுரிய தொன்றாகும். இறைவன் அமைத்துக் கொடுத்த இத்தனிச் சிறப்பை உணராதிருப்பது அவனது, மொழி, இனம், பண்பாடு யாவற்றிற்கும் ஓர் இழுக்காகும். மற்றைய நாடுகளின் இனம், மதம், மொழி, பண்பாடுகளை அறிந்து மதிப்பதும் தமிழனின் ஒரு தனிச் சிறந்த பண்பாடாகும்.

## பண்பாடு என்றால் என்ன ?

பண்பாடு என்றவுடன் ஓர் இனத்தின் மொழி, கலை, ஒழுக்கத் தத்துவங்கள் ஆகியவையே நம் மனக்கண்முன் தோன்றி நிற்கின்றன. இவையாவும் பண்பாட்டின் கனிகளே. இக்கனிகள் கனிந்து நிற்கக் காரணமாயிருந்த வரலாறு, மனஎழுச்சி, சமூகஅமைப்பு, இலட்சியங்கள், உயர்ந்த மதிப்பீடுகள் போன்றவையே ஒரு பண்பாட்டின் அடிப்படை அம்சங்களாகும்.

## தமிழ்ப் பண்பாடும் சமயமும்

பண்பாடு சமயத்திற்கு ஊட்டமளித்து உருக்கொடுக்கின்றது. சமயம் உயிர் என்றால் பண்பாடு உடல் போன்றது. இறைவனைத் தொழுவதே தன் முதல் கடமையெனத் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். தொழில், சமையல், அறிவு, அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் சமயச் சடங்குகள் புகுந்துள்ளன. சமயவழிபாடுகள் தமிழ்ப் பண்பாட்டின் மாண்பை வளர்த்துக் காத்து வந்துள்ளன.

## இயற்கையும் தமிழ்ப் பண்பாடும்

தமிழ் இலக்கியங்களும், கலையும், இயற்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன. தமிழ் விழாக்களும் இயற்கைக் காலங்களுக்கேற்ப அமைந்துள்ளன. இதனால்தான் தமிழ்ப் பண்பாடு அழிக்கமுடியாத தொன்றாக, என்றும் அழியாப் புகழ் பெற்று உலகமக்களால் போற்றி மதிக்கப்படுகின்றது.

### பண்பாடும் நாகரீகமும்

நாளுக்கொன்றாக நாகரீகம் மாறிவரும் இன்றைய உலகில் பண்பாடு பழமையானது என்று அறியாமையினால் அதனைப் புறம்பே ஒதுக்கிவிடுகின்றார்கள். நாடக மேடையில் போடுகின்ற வேடங்களைப் போன்று இன்று தமிழ்மக்கள் தம் உடைகளையும் அநாகரீக முறையில் மாற்றிக்கொள்ளுகின்றார்கள். தமிழன் என்ற பெருமை – அவன் அணியும் ஆடையிலும் இருப்பதை நாம் மறுக்கமுடியுமா ?

### வாழ்வும் நம் பண்பாடும்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் பண்பாடு முக்கிய இடத்தை வகிக்கின்றது. பண்பாடு ஒருவனுக்கு உயர்ந்த மதிப்பைக் கொடுக்கின்றது. பண்பாடு வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாததொன்று. வாழ்க்கையைப் பக்குவப்படுத்தி நம்மை உருவாக்கும் உயர்ந்த நம் தமிழ்ப் பண்பாட்டை உரிய முறையில் போற்றிக் காப்பது தமிழ் மக்களாகிய எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

ஜே. நீக்கிலஸ்

ஐயோ TAMIL லே

கடிதம் எழுதும் முறைகளிலே இளைஞர்களிடையே தற்பொழுது ஒரு புதுமுறை புகுந்துள்ளது.

Mydear மாலா,

உம்முடைய Letter கிடைத்தது. thanks. நான் உம்முடைய Friend ஐ நேற்று meet பண்ணினேன். Evening இரண்டுபேரும் Showவுக்குப் போனோம்.

இத்தகைய தமிழர்களை நினைக்க ஐயோ Tamil ல என்று தலையில் அடித்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.

## அட்டைப்பட விளக்கம்

கார்த்திகை—மார்கழி 1979 இதழில் அட்டைப்பட விளக்கம்
பரிசு பெறும் விளக்கம்

# இறைவா ஏன் இந்த ஏற்பாடு நீ சொல்?

அன்று :—

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் சரித்திரத்தில் இருந்துகொண்டான் கிறிஸ்து. அவனை அறிந்துவிட ஆர்வங்கொண்டோர் இங்கு பலருண்டு.

இன்று :—

இரண்டாயிரம் கிறிஸ்துக்கள் தினம் சரித்திரமின்றி மறைகின்றனர். இவ் அவலநிலையை இங்கு கேட்பதற்கு யாருமில்லை !

கிறிஸ்துவின் வருகைக்கு அர்த்தம்தேடி இரண்டாயிரம் வருடங்களின் ஏடுகளைப் புரட்டுகின்றோம். ஆனால்...

அருகிலுள்ள கிறிஸ்து தரும் ஆயிரம் அர்த்தங்களை அறிந்துகொள்ள எமக்கு நேரமில்லை.

அன்று அறிஞர்களும், அரசர்களும், அனைத்துலகும் அவரை அறியவில்லை.

இன்று இங்கிருக்கும் இயேசுக்களை ஏற்றுக்கொள்ள எவருமில்லை.

அன்றுமில்லை, இன்றுமில்லை, என்றுமே உலகம் அவரை அறிந்துகொள்ளவில்லை.

அட்டைப்படத்தில் அன்னைமரி உலகமாதா அரவணைப்பில் இங்கு ஒரு கிறிஸ்து இன்றைய வறிய நாடுகள், வளர்முக நாடுகள், 3-ம் உலகநாடுகள், மற்றும் போர்களாலும், புரட்சிகளாலும் உருக்குலைந்த நாடுகளே அந்த அன்னையவள் மடிமலர்ந்த அந்த மகவு சொந்தத்தில் உணவில்லை (புட்டிப்பால்) மற்றும் உயிர்வாடி முன்னேற அனைத்துக்கும் அபிவிருத்தியடைந்த, முன்னேறிய உலக நாடுகளிடம் கையேந்தி, உதவி கேட்டு, மண்டியிடவேண்டிய அவலநிலை. உயர்வடைந்த உலக நாடுகளுக்கு இந்தக் கிறிஸ்து கூறும் அர்த்தங்களில் அக்கறையில்லை, போரிலும், போட்டியிலும், பலத்திலும், பதவியிலும், சந்திரமண்டலத்திலும் பலகோடி பணத்தையும், பல்லாயிரம் ஜீவன்களையும் பணயம்வைத்து பந்தயம் ஆடுகின்றன. நசுக்கப்பட்டு, வறுமையுற்று அல்லலுறும் கிறிஸ்துவின் அவலநிலையைக் கண்டு இறைவனும் இரங்கமாட்டானா என ஏங்கிநிற்கும் உலகமாதா.

றெஜினா சாந்தி கஸ்மீர் முத்தையா பெற்ரு, மன்னார்.

# தமிழர் பண்பாட்டில் வெற்றிலை

— எஸ். எம். ஜே.

தமிழ் மக்கள் பண்டுதொட்டுப் பல சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் வழமைகள் என்பன வற்றை உடையவர்களாய் வாழ்ந்து வருகின்றனர். பல நாகரிகங்கள், ஐரோப்பிய கலாச்சாரங்கள், ஆங்கில நாகரிகச் செல்வாக்குகள் என்பன தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பினும் பாரம்பரியமான சில வழக்கங்கள் முற்றுக மாறவும் இல்லை, மறையவுமில்லை.

### விருந்தோம்பலில்

தமிழர் பண்பாட்டில் விரவி நிற்கும் ஒருபொருள் வெற்றிலையாகும். தமிழரின் வாழ்க்கையில் பிணைப் பிலைந்து இரண்டறக் கலந்து பிரிக்கமுடியாத இடத்தைப் பிடித்திருக்கிறது வெற்றிலை என்றால் அதுமிகையாகாது. சடங்குகள், பண்டிகைகள், திருவிழாக்கள், குடும்பத்தில் நிகழும் வைபவங்கள், கொண்டாட்டங்கள் எதுவும் வெற்றிலையின்றி நடைபெறமாட்டாது. தமிழர் விருந்தோம்பல் பண்பிலே முதன்மைத் தானத்தை வெற்றிலைக்களித்துள்ளனர். விருந்தினரை உபசரிக்கவும், வரவேற்கவும் முதலில் வருவது வெற்றிலைதான். வீட்டுக்கு ஒருவர் வந்தவுடன் தண்ணீரோ, பானமோ கொடுத்து உபசரிப்பதும், சுருட்டு, சிகரெட்டு வழங்குவதும் இன்றைய வழக்கமாகி விட்டது. ஆனால் பன்னெடுங்காலமாக வெற்றிலைத் தட்டத்தையோ வெற்றிலைப் பெட்டியையோதான் முதன் முதலில் விருந்தினருக்கு வைத்து உபசரிப்பது வழக்கமாகியிருந்தது.

> இளம் வயது என்பது இளகிய மெழுகு போன்றது. சூடாறுவதற்குள் நாம் விரும்பும் உருவத்தை ஆக்கிவிட வேண்டும். சூடாறினால் அதை மாற்றியமைப்பது மிகவும் கடினம்.

வயோதிபருக்கு வெற்றிலை இடித்துக்கொடுப்பது மரபு. வெற்றிலை உரலும் இடிக்கும் சிறு இரும்பு உலக்கையும் எல்லா வீடுகளிலும் இருக்கும். செம்பினால் அல்லது பித்தளையிலான வெற்றிலை உரல்களும் இலகுவில் எடுத்துச் செல்லக்கூடிய அளவுகளில் பலரது இல்லங்களில் காணக்கூடியதாயிருக்கும். கால்வைத்த அழகிய வேலைப்பாடமைந்த வெற்றி

லைத் தட்டங்களும், செம்பு, பித்தளை, வெள்ளி முதலிய உலோகங்களிலான வெற்றிலைத் தாம்பாளங்களும், எல்லா வீடுகளிலும் இருந்தன. திருமண விழாக்களில் விருந்தினருக்கு வெற்றிலை வழங்கும் வழக்கம் இன்றும் தமிழரிடமுண்டு. மங்கல காரியங்களில் மாத்திரமல்ல, அமங்கல வைபவங்களிலும் வெற்றிலை வழங்கும் பழக்கம் நம்மிடையே உளது. பட்டினங்களில் இது அருகி வரினும், கிராமங்களில் முற்றாக மறையவே இல்லை.

## மங்கலப் பொருளாக!

சுபவேளைகளில், சுப கருமங்கள் நடைபெறும் வேளைகளில், அங்கு வெற்றிலையும் இருக்கத்தான் செய்கிறது. மங்கல விளக்கேற்றும் போது வைக்கப்படும் முக்கிய பொருள்களில் ஒன்றாக விளங்குவது வெற்றிலையாகும். நிறைகுடம் வைக்கவும் வெற்றிலை முக்கியமாகப் பயன்படும்.

திருமணப்பேச்செடுக்கும்போது அல்லது கலியாணத்துக்கு நாள் குறிக்கும்போது சம்பந்திகள் வெற்றிலை மாற்றிக்கொள்வதும் வழக்கமாகும். திருமணத்தம்பதிகளில் மணப்பெண் மணமகனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் பழக்கமும் தமிழரிடமிருந்தது. இன்றும் சில இடங்களில் சாப்பாட்டின்பின் மனைவி கணவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் சம்பிரதாயம் உண்டு. இந்தியாவில் பெண்வீட்டார் திருமணப் பேச்சுக்கு பிள்ளை வீட்டுக்குப் போகும்போது வெற்றிலையோடு பழம் முதலியன எடுத்துச் செல்வது மரபு. நிச்சயதார்த்த வெற்றிலை மாற்றல் என இதை முன்னோர் அழைப்பர். திருமண ஓலை அல்லது அழைப்பிதழ்கள் வழக்கில் வரமுன்னர் வெற்றிலை வைத்தல் என்னும் முறையே தமிழ் மக்களிடம் நிலவியது. பெண்வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் தங்கள் உறவினர் இனபந்துக்கள் இல்லங்களுக்குச் சென்று வெற்றிலைவைத்துத் திருமண விழாவுக்கு அழைப்பதே வழக்கமாயிருந்தது. ஒருவர் அழைப்பை ஏற்கவில்லை என்றால் அவர் வெற்றிலையை ஏற்க மறுத்து விடுவார்.

● அடக்கம் இல்லாமல் பண்பாடு இல்லை.

— ராஜாஜி.

● ஒருசெடி வளர்வதற்கு என்னென்ன தேவையோ, அதைப் போன்று மனிதன் பண்பாட்டைப் பெறுவதற்குக் கல்வி அவசியம்.

— ரூஸோ.

தொகுப்பு:

ஆர். எஸ். செல்வரட்னம்.

வெற்றிலை வைப்பது என்பது உயர்குலத்தவரது வழக்கமாக மாத்திரம் இருக்கவில்லை. இவ் வழக்கம் தமிழர் வகுத்து வைத்ததை எல்லாக் குலத்தவரிடையேயும் இருந்தது. குடிமக்கள் என நாட்டாண்மைக்காரர் என்போர் தமக்குக்கீழ் வைத்திருந்தவர்களும்

கூடத் தம் எஜமானரான உயர் குலத்தோருக்குத் திருமண வைபவங்கள் சுபகருமங்களின்போது வெற்றிலை வைப்பதும் வழக்கம். குறிப்பாகத் துணிகழுவும் சலவைத் தொழிலாளர் தாம் தொண்டுசெய்யும் உயர்குல வீடுகளுக்குச் சென்று வெற்றிலை வைப்பது பண்டைய வழக்கம். அச்சியந்திரங்கள் மலிந்து திருமண அழைப்பிதழ்கள் தமிழர் கலாச்சாரத்தில் புகுந்த பின்னர் சிலர் வெற்றிலைகளில் அழைப்பை அச்சிட்டும் வழங்கினர். வெற்றிலை உருவமான காகிதங்களில் அழைப்புகள் அச்சிடப்படுவதுமுண்டு.

குழந்தை பிறந்துவிட்டால் சோதிடரை அழைத்து சாதகப், குறிப்பு என்பன கணிப்பது தமிழர் மரபு. அப்போது வீட்டுக்கு வரும் சோதிடருக்கு வெற்றிலையில்தான் கிரயம் வழங்கப்படுகின்றது

மைபோடுதல் என்ற வழக்கம், மைபோட்டுப் பார்த்தல் என்பதும் தமிழரிடை இருந்துவரும் பழக்கங்களில் ஒன்று. மைபோடுவதற்கு வெற்றிலைதான் பயன்படுத்தப்படுகின்றது. இந்துக்கள் ஆலயங்களுக்குச் செல்லும்போது வெறுங்கையோடு போவதில்லை. நைவேத்தியம், தெட்சணை கொண்டுதான் போவார்கள். அப்பொழுதெல்லாம் கூடவே வெற்றிலையும் கொண்டு செல்வர்.

## கௌரவிக்கும் பொருளாக

வருடப்பிறப்பு வந்ததும் சுபநேரம் நாள் பார்த்து கைவிசேஷம் கொடுப்பது தமிழர் சால்பாகும். அப்போதெல்லாம் வெற்றிலையில் வைத்துத்தான் காசு வழங்கப்படும். புதுமனை புகுவிழாவின்போது வீட்டுக்கட்டு வேலைசெய்த மேசன், தச்சுத்தொழிலாளி என்போருக்கு வெற்றிலையில்தான் சந்தோஷம் வழங்குவது இன்றும் உள்ள வழக்கமாகும். சுடுகாட்டிலும் இடுகாட்டிலும் வெற்றிலை கொடுப்பது தமிழரிடையில்உள்ள மற்றுமோர் வழக்கமாகும்.

முற்காலத்தில் ஒருவர் உறவினர் வீடுகளுக்குச் செல்லும்போது, அல்லது தொழிலாளர் எஜமானர் வீடுகளுக்கு ஏகும்போது, பிரதானிகள், தலைமைக்காரர் முதலியோரைச் சந்திக்கப்போகும்போது வெறுங்கையோடு போவதில்லை. ஒருகை வெற்றிலையாவது கொண்டு செல்வதே தமிழர் பண்பாடாயிருந்தது. இன்று கையூட்டு எனப்படும் இலஞ்சம் கொடுக்கவும் வெற்றிலையைச் சாதனமாக்கிக்கொள்வதில் சமர்த்தரும் இருக்கவே இருக்கிறார்கள். ஓர் ஏழை கொடுக்கக்கூடிய ஆகக் குறைந்த செலவுள்ள பொருள் வெற்றிலையாகவே அன்றிருந்தது.

## உணவாக!

வெற்றிலைபோடும் பழக்கமும் தமிழரின் மிகப்பழைய பழக்கமாகும். பாக்கு, சுண்ணாம்பு, காசிக்கட்டி, மற்றும் வாசனைப் பொருட்களுடன் சேர்த்து வெற்றிலை சுவைப்பர். சிலரது மடிகளில் எந்நேரமும் வெற்றிலை இருந்து

கொண்டே இருக்கும். பொது வாசத் தொழிலாள வர்க்கத்தின ரிடையே வெற்றிலைபோடும் பழக்கம் மிகுதியாக உண்டு. வெற்றிலை சுவைப்பதில் பெண்களும் சளைத்தவர்கள் அல்ல.

## மருந்தாக

தனவந்தர், பிரபுக்கள், அரச குடும்பத்தினர், நிலச்சுவாந்தர்கள், ஆதீனக்குருக்கள் முதலானோர் உபயோகிக்கும் தாம்பூலம் கஸ்தூரி முதலிய மருந்துப் பொருள்கள் சேர்ந்ததாயிருக்கும். அப்படி இருப்பதால் உணவு செமிபாடாகும் என்றும், உணவில் நஞ்சுத்தன்மை இருப்பின் அதை வெட்டவும்கூடும் என்று நம்பியிருந்தனர். முத்தை நீற்றிச் சுண்ணும்பாக வெற்றிலையில் தடவி உண்டனர் வசதிபடைத்த செல்வந்தர் என்றால் வெற்றிலையின் மகிமை எத்தகையது என விளக்கவும் வேண்டுமா?

வெற்றிலை ஆயுள்வேத வைத்திய நூல்களில் குறிப்பிடப்படும் மூலிகைகளில் ஒன்றாக விளங்குகின்றது. வாய் நாற்றத்தை நீக்கும்; வெற்றிலைச்சாற்றைத் தேன் சேர்த்து உண்டால் இருமல்குணமாகும்; வாசனைப் பொருள்களுடன் சேர்த்துச் 'சர்புத்' செய்து உண்டால் பெலன் தரும்; தாது விருத்தியாகும். வெற்றிலைச் சாற்றைக் கண்ணில் இட்டால் கண்வலி அகலும்; காதில் இட்டால் காதுவலி நீங்கும். இருமல் வந்தால் வெற்றிலையில் எண்ணெய் பூசி இளஞ் சூடாக்கி மார்பில் அப்புதல் நல்லது என்று நாட்டு வைத்தியர் கூறுவர். ஆயுள்வேத வைத்தியத்தில் இருமல் மார்புச் சளி, தடிமல் என்னும் நோய்களுக்கு வெற்றிலைச்சாறு அனுமானமாகப் பயன்படுத்தப் படுகிறது. இவ்வண்ணம் மருந்தாகவும் விருந்தாகவும் இலட்சுமிகரப் பொருளாகவும் விளங்கும் வெற்றிலை இயற்கை அளித்த அருங்கொடைகளில் ஒன்று என்றே கூற வேண்டும்.

### தமிழ் வளர்க்கச் சபதம் செய்வோம்

தென்னிநல் அறங்களையே தெளிவாய்ச் சொல்லித்
    திணையலவும் பிசகாமல் நடந்து காட்ட
வள்ளுவனே மறுபடியும் வந்தான் என்ன
    வழிகாட்டித் திருக்குறளை வாழ்ந்த வள்ளல்
பிள்ளை மனப் பேரறிஞன் பெம்மான் காந்தி
    பெருநெறியே தமிழ்த்தாயின் பேச்சா மென்று
கள்ளமற நாமறிந்து கொள்வோ மானால்
    காத்திடலாம் தமிழ்மொழியை; வளர்ச்சி காணும்.

— நாமக்கல் கவிஞர்.

# 'பண்'........... பாடு

வந்தாரை வரவேற்று — நொந்தாரின் நோய்தீர்த்து
சந்தோசம் கண்டதெங்கள் பண்பாடு — இன்று
மண்பானை போலாகி — கல்மீது தான்மோதி
சின்னாபி(ன்) னம்மான(து) கண்கூடு !
அழகுக்கு எழிலூட்டி — அயலுக்கும் அறிவூட்டி
வாழ்வுக்கு வழிதந்த பண்பாடு — இன்று
'விழலுக்கு நீராக' — வீணுக்கு அலங்கார
மாகின்ற நிலையேதான் கண்கூடு !
சடங்குகள் ஆனாலும் — சாத்திரங்க ளானாலும்
அடங்கிய அர்த்தமெம் பண்பாடு — இன்று
அனர்த்தமாய் அற்பமாய் — அவசியம் அற்றதாய்
முடங்கிய அவலமே கண்கூடு !
கதிர்வானம் எழுமுன்னே — கமம்செல்லும் கணவர்க்கு
கஞ்சிகொண் டவள் செல்லும் பண்பாடு — இன்று
கால்மேசு சுழற்றாத — மோகத்தில் மூழ்கியினம்
மூச்சுத் திணறும் நிலை கண்கூடு !
"யாதும் ஊரே" என்று — "யாவரும் கேளிர்" என்று
ஓதும் உறவு எங்கள் பண்பாடு - இன்று
வாழும் நாட்டில் கூட — வாடும் நிலையில் அலை
மோதும் தமிழர் நிலை கண்கூடு !
ஓலம் கேட்டாய் தெய்வம் — கோலம் கண்டாய் தெய்வம்
பாலம் போட்டேன் கவி என்பாடு — எம்
மானம் அழிக்க வந்தோர் — உதிரம் குடிக்க வந்தோர்
மனதை மாற்றலினி உன்பாடு !
இடத்தில் அடித்தால் மீண்டும் — வலத்தைக் காட்டச் சொன்னால்
க(ா)ட்டிக் காத்துநின்றோம் பண்பாடு — தமிழ்
இனத்தை அழித்த பின்னர் — இதற்கு என்னசெய்வோம் ?
எனக்குப் பதிலுரைத்துப் பண் ...... பாடு !

— சம. கண்ணன்,
முருங்கன்.

# தமிழா ! சிந்தித்துப்பார் !

பொன். பூலோகசிங்கம்
தலைவர்,
உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் (இலங்கைக் கிளை)

பண்டைத் தமிழர்களின் செயல்கள் பாரெங்கும் தமிழனுக்குப் புகழ் சேர்த்தன. " யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற ஒப்பற்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்திப் புகழ் பெற்றார் கணியன் பூங்குன்றனார் எனும் புலவர். தமிழைப் பழித்த கனகன், விசயன் என்ற இருவரது கர்வம் அடங்கி அவர் தலையில் கல்லை வைத்து எடுத்துவந்து கற்புக்கரசியாம் கண்ணகிக்குக் கற்சிலை எழுப்பிப் புகழ்பெற்றான் சேரன் செங்குட்டுவன். கன்னித் தமிழுக்காக உயிர்கொடுக்க முனைந்தான் குமணன். கடவுளையே அழைத்து கழகத்தில் அமர்த்தித் தமிழை ஆராய்ந்தார் நக்கீரர் எனும் நற்றமிழ்ப் புலவர். களப்பரணியாகக் கலிங்கத்துப் பரணியைப் பாடித் தமிழரது அளப்பரிய வீரத்திற்குப் புகழ் சேர்த்தார் சயங்கொண்டார். கலிங்கம் வென்று தமிழர் புகழை ஓங்கச் செய்தான் குலோத்துங்கசோழன். கற்கோயில்களைக் கலைக் கோயில்களாகக் கட்டினான் மகேந்திர பல்லவன். கடல் கடந்து நாடுகளைக் கைப்பற்றித் தமிழும் சைவமும் பரப்பினான் இராஜ ராஜ சோழன் கடாரம் வென்று புகழ் பெற்றான் இராசேந்திர சோழன். காவிரிக்குக் கல்லணை கட்டினான் கரிகாற் சோழன்.

கப்பலோட்டிக் கடல் கடந்த நாடுகளுடன் எல்லாம் வியாபாரம் செய்து, புகழ்பெற்றதோடு " திரைகடல் ஓடித் திரவியம் " தேடுவதிலும் வல்லமை பெற்று விளங்கினர் பண்டைத் தமிழர்கள். இப்படியாக " ஈதல் இசைபட வாழ்தல் " என்ற சான்றோர் மொழிகொப்ப வாழ்ந்த தமிழர்களது நிலையை இவறு எடுத்து நோக்கின் அவர்கள் உலகம் பூராவும் வசைமொழிகளால் இழித்துரைக்கப்பட்டு வாழும் நிலையையே காண்கிறோம்.

தமிழரது இன்றைய நிலையை எண்ணினால் நெஞ்சம் துன்பக்களமாகும். கண்கள் கண்ணீர்க்குளமாகும். தாய்த் தமிழகத்தில் தமிழர்கள் " மதராசி வாலா " என்று இன்று மாற்றாரால் அழைக்கப்படுகிறார்கள். தாய்லாந்து நாட்டிலோ தமிழர்களை அந்த நாட்டவர்கள் " தமின் " என்றழைக்கிறார்கள். " தமின் " என்றால் அந்த நாட்டு மொழியில் " கொடியவன் " என்று பொருளாம்.

இறியூனியன் தீவில் வாழும் தமிழர்களை அந்த நாட்டின் ஏனைய பிரசைகள் "மலபார்" என்றழைக்கிறார்கள். இலங்கைத் தீவிலோ தமிழர்கள் " கள்ளத்தோணி " என்றழைக்கப்படுகிறார்கள். பிரிட்

டனில் தமிழர்களைப் "பாக்கி" என்றழைக்கிறார்கள். பிஜித் தீவிலும், மொரீசியஸ், தென்னாபிரிக்கா முதலான இடங்களில் "கூலி" என்றழைக்கிறார்கள். மலேசியாவில் "கிள்ளங்கி" என அழைக்கிறார்கள். பர்மாவில் "கல்லா" என அழைக்கிறார்கள். தமிழர்கள் சிறிது சிறப்புடன் வாழும் சிங்கப்பூரிலும்கூட அந்த நாட்டின் ஏனைய பிரசைகள் தமிழர்களை "கிளிங்கர்" என்றழைக்கிறார்கள்.

ஒருகால் சர்வதேசமடங்கிலும் சர்வ வல்லமைபெற்றுத் திகழ்ந்த தமிழினம் ஐரோப்பியர் கீழை நாடுகளுக்கு வியாபாரம் செய்ய வந்தமையால் அவர்களால் சர்வதேசமடங்கிலும் ' மலிந்த ஊழியமாக " எடுத்துச் செல்லப்பட்டு அவர்கள் இம்மக்களது உழைப்பை உறிஞ்சித் தமது வாழ்வை வளமாக்கிவிட்டு அந்தந்த நாடுகளில் எல்லாம் தமிழர்கள் இன்று "தேசிய சுமை" களாகக் கணிக்கப்படுகிறார்கள். கொடியும் கொற்றமும் கொண்டு வாழ்ந்த இனம் இன்று கொத்தடிமையும் கொற்றேவலும் புரியும் இழிநிலையில் வாழுகின்றது. என்று மறையுமோ இந்த இழிநிலை. அன்று வாழ்ந்த நிலையைச் சிந்தித்துப் பார்த்து இன்று வாழும் இழிநிலையைக் கருத்தில்எடுத்து ஆராய்ந்து நாளை வாழப்போகும் நிலையை அமைத்துக்கொள்ள யாவரும் திட சங்கற்பம் பூண்போமாக.

## தமிழ்

விஞ்ஞானம் அதனோடு விளையாடி நிற்கும்
மெய்ஞ்ஞானம் அதைமட்டும் மிகநாடி நிற்கும்
பொய்ஞ்ஞானம் வாதித்துப் புனிதத்தை இகழும்
அஞ்ஞானம் இல்லாமை அதுபெற்ற புகழாம்
கொல்லாமை பொய்யாமை எனுமிவ் விரண்டில்
எல்லாநல் அறமுற்றும் இடைநிற்றல் கண்டு
சொல்லாலும் செயலாலும் மனதாலும் தொழுவோம்
நல்லோர்கள் பணிதந்த தமிழ்வாழ்க நாளும்.

— நாமக்கல் கவிஞர்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 10

| | | | |
|---|---|---|---|
| 1 ம | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | ■ | ■ |
| 15 | 16 | 17 | 18 |
| 19 | ■ | 20 | 21 யை |

### மேலிருந்து கீழ்

1. கிரேக்க நாட்டில் இலியட், ஒடிசி போன்று தமிழ் நாட்டில் பிரசித்தி பெற்றது.

2. நான்கு உறுதிப் பொருள்களைக் கூறுவதாய்க் கதை பற்றி வரும் செய்யுள் நூல்?

17. நட்பிற்கு எதிரானது.

### இடமிருந்து வலம்

1. புத்தர் ஞானம்பெற்ற விருட்சம்.

5. இந்த இனத்தின் விடுதலை கோரி உயிர் நீத்தோர் வரிசையிலே முதலிடம் பெறுபவர் ஆபிரகாம் லிங்கன்.

9. பாக்தாத் நகரிலிருந்து 50 மைல் தொலைவிலுள்ள பண்டைப் புகழ்பெற்ற நகரம்;

15. இதனை வீதிகளின் இருமருங்கிலும் நிறுத்தி வைத்திருப்பர்

20. தங்கை.

# தமிழ் மொழியின் தன்மை

இக்கட்டுரையை வரைந்த அன்பர் தன்பெயரையோ முகவரியையோ குறிப்பிடவில்லை. எனவே எழுதியவர் பெயர் இல்லாமலே பிரசுரிக்கப்பட்டுள்ளது. கட்டுரைக்கு உரியவர் கட்டுரை வரைந்துள்ள கையெழுத்தில் எம்மோடுதொடர்புகொண்டால் அவர் பெயரை வெளியிடுவோம் என அறியத் தருகிறோம். — ஆர்.

தமிழ் எனுஞ் சொல்லிற்குப் பொருள் "இன்பம் என்பதைச் சிந்தாமணி ஆசிரியர் "இனிமையும் நீர்மையும் தமிழ்எனலாகும்" என்றார். தமிழ்மொழி தெய்வத் தன்மை வாய்ந்தது என்றும் பொதிய மலையிற் தோன்றியது என்றும் கூறப்படுகிறது. மேலும் தமிழ் மொழியின் சிறப்புக்களைப் பின்வரும் பதங்கள் தாங்கி நிற்கின்றன. அவையாவன : செந்தமிழ், தீண்டமிழ், கன்னித் தமிழ், கன்னற்றமிழ், தண்டமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், இன்றமிழ், பைந்தமிழ், பசுந்தமிழ், நற்றமிழ், தெய்வத்தமிழ் என்பனவாகும். இவற்றினை நுணுகி நோக்கும்போதே நாம் தமிழ் மொழியின் தன்மையைத் தெள்ளெனத் தெரிந்துகொள்ள முடியும்.

20-ம் நூற்றாண்டில் இணையற்ற கவிஞரான பாரதிதாசன் தமிழின் தொன்மையைக் கூறும்போது,

> திங்களோடும் செழும் பரிதி
> தன்னோடும்
> விண்ணோடும் உடுக்களோடும்
> மங்கு கடல் இவற்றோடும்
> பிறந்த தமிழுடன்...

என உலகத் தோற்றத்துடனே தமிழும் தோன்றியது என்கிறார். மேலும் இறைவன் தமிழ் மொழியை தமிழ்ச் சங்கத்தில் அமர்ந்து ஆராய்ந்தார் என்று வரலாற்றுக்கு ஆதாரமாகப் பின்வரும் திருவிளையாடற் புராணப் பாடல் ஒன்றுள்ளது.

> கண்ணுற்ற பெருங் கடவுளுங்
> கழகமோடமர்ந்து
> பண்ணுறத் தெரிந்தாய்ந்த
> இப்பசுந் தமிழேனை
> மண்ணிடைச் சில இலக்கண
> வரம்பிலா மொழிபோல்
> எண்ணிடைப் படக் கிடந்தா
> எண்ணவும் படுமோ......

என்பதாகும்,

தமிழ் மொழியானது மற்றைய மொழிகளுடன் பொருதித் தாக்குதல் நடத்தியது என்று கூறப்படுகிறது. குறிப்பாக இரண்டாயிரம் ஆண்டுகள் ஆரியமொழியுடனும், அறுநூறு ஆண்டுகள் உருதுமொழி

யுடனும், நூற்றைம்பது ஆண்டுகள் ஆங்கில மொழியுடனும் பொருதிய போதிலும், தனது இயல்புகளைக் கைவிடாது கட்டிக் காத்த பெருமை இம்மொழிக்கு உரியது என்று வரலாறு கூறுகின்றது.

“திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” என்ற நூலின் ஆசிரியரான கால்ட் வெல் ஐயர் பன்னிரண்டு திராவிட மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று என்றார். அவர் கருதிய திராவிட மொழிகளாவன தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், கோத, தோத, துளு, கொண்ட், கூய், கூர்க், மால்தோ, பிராகுவி என்பனவாம். இவற்றுள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளுமே இலக்கிய வளமுள்ள மொழிகளாகும். கால்ட்வெல் ஐயர் திராவிட மொழிகளைப் பன்னிரண்டு எனக் கூறி வைக்க கமல் ஸ்வலபில் (Kamel Suvailable) என்பவர் ஏறக்குறைய இருபத்திரண்டு மொழிகள் இன்று உள்ளன எனக் கூறியுள்ளார்.

திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே புகழ்மிக்க மொழியாகவும், புவியியல் ரீதியில் அதிக இடப் பரப்பில் பரவியுள்ளதாகவும் பண்டைக் காலந்தொட்டு வளமுள்ள இலக்கிய பாரம்பரியத்தை உடையதாகவும், அமைந்துள்ளது. இந்தவகையில் இந்தியாவிலே சமஸ்கிருத மொழி ஒன்றுடன் மட்டுமே ஒப்பிடக்கூடிய ஆற்றல் பெற்றுள்ளது. இந்திய யாப்பில் பதினாறு மொழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் தமிழ் மொழியும் ஒன்று.

தமிழ்மொழி இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, பிஜித்தீவு, மொறீசியஸ், மாட்டினிக் போன்ற இடங்களில் பரந்த அளவிற் பேசப்படுகின்றது. இந்தோனேசியா, வியட்னும், சூரினு', பிரிட்டிஸ், கயானு, றினிடாட் போன்ற இடங்களில் சிதறலாகவும் பேசப்படுகின்றது எனப் பேராசிரியர் தனிநாயகம் அடிகள் “The study of Tamil group” என்ற நூலில் கூறியுள்ளார். கி. மு. 1500 ஆண்டளவில்

> **இளமை**
>
> இளம்பருவம் என்பது காட்டாற்று வெள்ளம் போன்றது. அதில் கட்டுப்பாடு என்ற உறுதியான அணை இல்லாவிட்டால் கண்ட இடத்தில் அது பாய்ந்து விடும்.
>
> — கிளேடர்

யூப்பிரட்டீஸ் நதிக்கரையில் பேசப்பட்ட மிதென்னிய மொழிக்கும், சூடான் நாட்டில் பேசப்படும் சனுரி மொழிக்கும் யூரல் மலைப் பகுதியில் பேசப்படும் சித்திய மொழிக்கும் நம் தமிழ் மொழிக்கும் தொடர்பு இருப்பதாக தமிழ் ஆராய்ச்சியாளர் கூறியுள்ளனர். தற்போது இந்தியாவிற் பேசப்படும் திராவிட மொழிகள் பிற

நாடுகளிற் பேசப்படாவிட்டாலும் உலக மொழிகள் பலவற்றுக்கும் தமிழ் முதலிய திராவிடமொழிக் குடும்பத்திற்கும் பல ஒற்றுமையுள்ளதென மொழியாராய்ச்சியாளர் ஆதாரங் காட்டியுள்ளனர்.

தமிழ் மொழியானது ஆரம்பத்தில் வடமொழியுடன் தொடர்பு கொண்டது. வட மொழியில் இருந்து பல சொற்கள் சொற்களஞ்சியத்திற் சேர்ந்து கொண்டன. ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழி சொற்களைக் கடன் பெறுதல் இயற்கை. இவ்வாறு தமிழ் மொழியும் வடமொழியிலிருந்து சொற்களைக் கடனாகப் பெற விரும்பியபொழுது முதலில் பாகதம், பாளி போன்ற மொழிகளினூடாகவே சொற்களைப் பெற்றது. அக்காலத்தில் இந்தியா முழுவதுமே சமஸ்கிருத மொழி ஆட்சிமொழியாக விளங்கியது, பௌத்த சமணருடைய செல்வாக்குத் தமிழ் நாட்டிலே மிகப்பரவலாக இருந்த காலத்தில் வடமொழிச் சொற்கள் பல தமிழுடன் சேர்ந்தன. சமஸ்கிருதத்தில் இவ்வாறாக கடன்பெற்ற தமிழ் பின்னர் நேரடியாகவே சமஸ்கிருதத்தில் இருந்து கடன் பெறத் தொடங்கியது இவை தமிழ் மொழியின் அமைப்புக்கு ஏற்ப மாறியமைந்தன.

வட மொழிக்குப் பின்னர் கிரேக்க ரோம வணிகத் தொடர்பால் தமிழுடன் கிரேக்க உரோமச் சொற்கள் சேர்ந்தன உ+ம். சுருங்கை இந்திய மொழிகளான தெலுங்கு, மலையாளம், இந்துஸ்தான், மராட்டி மொழியிலிருந்து தமிழ் மொழி கடன் பெற்றது. உதாரணத்துச் சில சொற்கள்.

தெலுங்குச் சொல் —

கத்தரி (க்கோல்) பக்தர்

மலையாளம் சொல் —

அவியல், சக்கை, பறை

இந்துஸ்தான் சொல் —

அபின், தபால், தொப்பி

மராட்டிச் சொல் —

குண்டான்.

பின்னர் சிங்கள மொழியில் இருந்து முருங்கை, பி.லி (சூனியம்) என்பனவும், சீன மொழியிலிருந்து பீங்கான் என்ற சொல்லும், அராபிய மொழியில் இருந்து ஏலம் என்ற சொல்லும், தமிழ்

---

**சுவைத்துப்பாருங்கள்**

ஒரு குருவானவர் எதற்கெடுத்தாலும் விவிலியத்தை மேற்கோள் காட்டுவது வழக்கம். இதை விரும்பாத சிலர் ஒருநாள் தம் இல்லத்திற்குள் புகுந்த ஒரு கழுதையை அடித்துவிரட்டியபின் இதற்கு பைபிளில் ஏதாவது விளக்கம் இருக்கிறதா? என்று கேலியாகக் கேட்டனர். அதற்கு அவர் "அவர் தமக்கு உரிய இடத்திற்கு வந்தார் அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" (அரு. 1: 1) என்று மேற்கோள் காட்டினார்.

கடவுளின் பிரதிநிதியிலிருந்து தொகுத்தவர் :

அ. சூசைப்பிள்ளை

---

மொழியுடன் சேர்ந்து கொண்டன. இதன் பின்பாக மூன்று முக்கிய மேற்கத்தேய மொழிகள் ஆதிக்கம் பெற்றன. போத்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலேயமொழிகள் தமிழுடன் கலந்தன.

உதாரணத்துக்குச் சில

போத்துக்கேயச் சொல்—

அலவாங்கு, கடதாசி, கதிரை

ஒல்லாந்த சொல்—

கந்தோர், உலாந்தா, அலுமாரி, அன்னுசி, சப்பாத்து.

ஆங்கிலச் சொல்—

கார், றைவர், பேனை, பென்சில், என்பன. இவற்றைவிட ஜேர்மனிய மொழி, பிரான்சிய மொழி, யப்பான் மொழி ஆகியவற்றின் சிறு பாதிப்பும் தமிழ் மொழியில் ஏற்பட்டன.

தமிழில் இருந்தும் சில சொற்கள் ஏனைய மொழிகளுக்கும் சென்றன. உ+மாக வடமொழியில் உள்ள பல்லி, நீர், அலை என்பன தமிழ் மொழியில் இருந்து வடமொழிக்குச் சென்றவையாகும். அதேபோல் சிங்கள மொழிக்கு உளுக்கு, சரக்கு, கல், முட்கு, குடை என்பன தமிழில் இருந்து சென்றன. கப்பல், முத்து, மாமா என்ற சொற்கள் மலாய் மொழிக்குச் சென்றன. செருப்பு என்ற தமிழ்ச் சொல் போர்த்துக்கேய மொழிக்குச் சிலிப்பர் என்றசொல்லாகச் சென்றது. தமிழில உள்ள தோகை என்ற சொல் கீபுறு மொழிக்கு துக்கு (Tuki) எனச் சேர்ந்தது. அரிசி என்ற தமிழ்ச் சொல் ஓரிசா (Oriza) எனக் கிரேக்க மொழிக்குச் சென்று பின்னர் றைஸ் (Rice) என ஆங்கிலத்தில் வந்து சேர்ந்தது. அணைக்கட்டு, கூலி, காஸ் (Cash) தேக்கு (Teak) என்ற தமிழ்ச் சொற்கள் ஆங்கில மொழியுடன் கலந்து அவற்றுள் இடம்பெற்றுவிட்டன. இவ்வாறுக் தமிழ் மொழி பல்வேறு மொழிகளிடம் இருந்து தன் இலக்கண அமைவுக்கு ஏற்ற முறையில் சொற்களைக் கடன் பெற்றது இதேவேளை தானும் தனது சொற்களஞ்சியத்திலிருந்து சில பல சொற்களை ஏனைய மொழிகளுக்குக் கடன் கொடுத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏறக்குறைய 124,400 சொற்கள் தமிழ்அகராதியில் (சென்னைப் பல்கலைக் கழகத் தயாரிப்பு) குறிக்கப்பட்டுள்ளது தற்காலத் தமிழில் சொல் அடைவை நோக்கும் போது எமக்குச் சொந்தமான மொழியும் பிறமொழிகளும் கலந்துள்ள தன்மையைக் காணலாம்.

இளமைப் பருவத்தின் அகராதியில் தோல்வி என்ற சொல்லுக்கு இடமே கிடையாதே,

— இலிட்டன்

# தமிழர் பண்பாடு

பண்பாடு என்பது அகவொழுக்கத்தைக் குறித்து நிற்க, கலாச்சாரம் என்ற பதம் புற ஒழுக்கத்தைக் குறிக்கின்றது. அக ஒழுக்கமாவது அன்பு, இன்சொல், உபசரித்தல், பிறரை மதித்து நடத்தல், தன்னடக்கம், பணிவு இவை போன்றவைகளை உள்ளடக்கியது. புறம் என்பது வீரம், போர் என்பவைகளைச் சுட்டி நிற்பதை மூவேந்தர் (சங்க) கால இலக்கியங்களில் காணலாம். அகம், புறம் ஆகிய இரண்டும் சேர்ந்ததே பண்பாடு என்பர்.

“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்” என்று கலித்தொகையில் கூறப்படுகின்றது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் பண்பாடு என்றவுடன் நடத்தைகள், மக்கள் அணியும் உடைகள் என்பவற்றோடு பெரிதும் தொடர்புபட்டுள்ளதை அறிய முடிகின்றது. (“Ceylon is a Culture detert”) “இலங்கை ஒரு பண்பாட்டுப் பாலைவனம்” என்று ஓர் அறிஞர் கூறியுள்ளதை அவதானிக்கும்போது பண்பாடு என்பது என்ன? அதன் வரைவிலக்கணம் யாது! என்பதை விளங்கிக்கொள்வது சற்றுக் கடினமாகின்றது.

மேலும் பண்பாடு என்று கூறும்போது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தங்களது சமூக, வரலாற்று வளர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவித்துக் கொண்ட பௌதிகப் பொருட்கள், மதச் சடங்குகள், சமூகப் பெறுமானங்கள் ஆகிய அனைத்தும் ஒன்று சேர்ந்த தொகுதியாகும். ஒரு கூட்டத்தின் பண்பாடு என்று குறிப்பிடும்போது அக்கூட்டத்தினரின் அன்றைய வளர்ச்சிக் கட்டத்தில் காணப்படும் தொழில் வளர்ச்சி, பொருளாதார ஆக்க முறைமை, கல்வி, இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் கூட்டுப் பெறுமானமாகும்.

இஃது இவ்வாறிருக்கத் திருக்குறளில் பண்புடைமை பற்றிக் கூறப்படுவதை நோக்கினால் பண்பாடு பற்றியே சொல்லப்படுகின்றது. மக்களை மொழிகளே கூட்டங் கூட்டமாகப் பிரித்துவைத்து

**தமிழர் பண்பு**

அறத்தின் வழி நிற்றல்
ஆண்மையில் உயர்தல்
இன்பத்தில் திளைத்தல்
ஈதலிற் சிறத்தல்
உள்ளத்தில் தெள்ளியராதல்
ஊக்கத்தில் தளராதிருத்தல்
எவரையும் தமராய்க்கொள்ளல்
ஏற்றத் தாழ்வின்றி வாழ்தல்
ஐயம் திரிபறப் பேசுதல்
ஒழுக்கத்தைக் காத்தல்
ஓரஞ்சாராது நிற்றல்
ஔவியம் தன்னை அகற்றல்
செவ்விய தமிழர் பண்பு.

முத்தமிழ் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்
தருபவர் : சின்னப்பு

விட்டது. மக்கள் வாழுகின்ற நாடுகளின் கால நிலைக்கேற்பவே மொழி பிறந்தது என்றாலும் ஒரே சிறிய நாட்டில் மொழி வேறுபடுவது அந்நிய 'தூரதேசம்' மொழி ஒன்றுடன் ஏற்படும் கலப்பினாலாகும். தமிழ் மொழியைப் பொறுத்தவரை அவர்கள் வாழும் நாட்டின் காலநிலைக்கு ஒத்ததே. அதனுடன் தொடர்புபட்டு ஒத்த தன்மையுடன் விளங்குவதே தமிழர் பண்பாடு.

இன்றைய கால கட்டத்தில் பண்பாடு என்பது இதுதானென்று பொதுவாக மக்கள் கருதுவதை, ஏற்றுக்கொள்வதை நோக்குவோமாயின் மிக மோசமான நிலையிலுள்ளதை அறிய முடிகிறது. தமிழர்களுக்கெனப் பாரம்பரிய பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், உடைமுறைகள் உண்டு. அவை இன்று காற்றில் பறப்பதைக் காணலாம்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் படித்த மேதைகளின் வார்த்தைதான். ஆனால் புகுவதும் கழிவதும் என்ன என்பதைச் சிந்திக்கவேண்டும். நாகரிகம் என்ற தலைப்பின்கீழ் நவநாகரிகம் தமிழ் இனத்தை அடிமைகொண்டு விடவும தவறவில்லை. பெண்கள் (கன்னியா) தம்மை அலங்கரிக்க வேண்டும். ஆனால் ஆண்களுக்கு ஆபாசத்தை அளிக்கும் கருவியாக மாறக்கூடாது. இவையும் பண்பாட்டின் ஓர் அங்கம்தான்.

"முன்னோர் எல்லாம் மூடர்கள் அல்ல. நமக்குண்டு பண்பாடு முழங்கால் தெரியும் ஆடையை மாற்றித் தமிழ் மகள் நடைபோடு" எனக் கூறும் கண்ணதாசன் கருத்தை ஏற்றுக்கொள்வதில் தவறில்லைப்போல் தோன்றுகிறதல்லவா?

இன்று பல இடங்களிலும் (பல்கலைக்கழகங்களிலும்) காண்பதைச் சகிக்கமுடியாமல் இருக்கின்றது. எல்லா விடயத்திலும் தமிழ்க் காளையர் கன்னியரிடம் பண்பாடு தன் தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டது.

தமிழர்க்கு எனத் தனிப்பட்ட பண்பாடு உண்டு, எந்த இடத்திலும் (ஸ்ரீலங்கா தவிர) தமிழர் என்பதைக் காட்டிக்கொள்ளப் பின் நிற்கக்கூடாது. தமிழர் பண்பாடு காலத்தால் முற்பட்டது. பெருமை பெற்றது. நாகரீகம் கொண்டது. பண்பு வாய்ந்தது. எனவே தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடிப்போம், வளர்ப்போம் என உறுதிகொள்வோம்.

மு. சுந்தரராஜன்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

# மண்ணிலும் முளைக்கும் நட்சத்திரம்

கிறிஸ்தவ பண்பாட்டுக் கழகம் நடத்திய
சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்ற சிறுகதை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இந்த மண்ணில் இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்தாலும் என் அக்காவை கொஞ்சநஞ்சமாக ஒட்டியிருக்கும் அந்த இளமையோடு வாழவைக்க என்னால் முடியாது. எவ்வளவோ படித்துவிட்டு ரோட்டளக்கும் கும்பலுக்கிடையில் ஜீ. சி. ஈ. க்கு எவன் வேலை தூக்கித்தரப்போகின்றான்? சொந்தமாகஒருதொழில் செய்யலாம் என்றாலும் முதலும் இல்லை மாலைபோட்டு மலர் தூவி காலைப்பிடித்துக் கையைப்பிடித்து காரியம் ஆற்றிடக்கூடிய செல்வாக்கும் அவனுக்கு இல்லையென்றாலும் அவன் மனதில் ஒரு சிறு நம்பிக்கை, மாமா கொஞ்சம் வசதியாக இருக்கிறார் கடனாக ஐயாயிரம் ரூபா கேட்டுப் பார்ப்பது. அவர் மனம்வைத்துத் தந்தால் அந்த "ஏஜென்சி" க்குக் கட்டிவிட்டுத் தன பயணத்தைத் தொடர்வது. கஷ்டப்பட்டு உழைத்து மிச்சம்பிடித்து அவரது கடனை அழித்துவிட்டு அக்காவை கூடிய சீக்கிரம் ஒருவனிடம் ஒப்படைத்து அவள் முகத்தில் சிரிப்பை வரவழைப்பது.

> ● ஒரு நாட்டின் இயற்கை வனப்பும் எழிலும் நீண்டுயர்ந்த கோபுரங்களும் ஒரு நாட்டின் பண்பாட்டை எடுத்து விளக்காது. எவ்விதமான மக்கள் அங்கு வாழ்கின்றார்கள் என்பதில்தான் அதன் சிறப்பு தங்கியிருக்கிறது.
>
> எமர்சன்.

திட்டப்படியே மாமாவிடம் கேட்டான். நீ சின்னப் பையன். எப்படி உன்னை நம்பித் தருவது? எத்தனையோ இடைக் கேள்விகளைக் கேட்டபின் தானும் மூன்று குமர்களை வைத்திருக்கும் எண்ணத்தில் ஒருவாறு "ஆறுமாதத்துள் கடனை அழித்திட வேணும். நீ உழைச்சு நல்லா வந்தால எங்களை என்ன கைவிடவா போகிறாய்?" என்ற பேரத்தில் கொடுக்க உடன்பட்டார்.

அதன்பின்பே தன் முடிவைத் தாயிடமும் அக்காவிடமு கூறினான். அன்னம்மாக்கை என்னை என்னை உயிரோடு புதைச்சுப் போட்டு போடா மகனே! அப்பனுவது உன் கையால கொள்ளி வைச்சுப்போறான். என்ர சாவுக்கு நீ எந்தக் கடலில அலையிறயோ" இயல்பான தாயன்பில் துடிதுடித்தாள்.

"இல்லேம்மா இரண்டுவருஷம் எனக்குக்கூட இந்த மண்ணைவிட்டுப் போறதென்றால் உயிரே போகுதம்மா. என்றாலும் என் அக்காவை வாழவைக்க வேண்டுமென்றால் இந்தமண்ணை விட்டுத் போகவேண்டும்." அவன் பிடிவாதத்தை யாராலும் மாற்றமுடியவில்லை.

அவனது நெஞ்சிலே நீக்கமற நிறைந்திருந்த தன் உடன் பிறப்பிற்காக இந்த நாட்டைவிட்டுப் போய் இன்றேடு இரண்டுவருஷம் ஆகிவிட்டது. அந்த இடைவெளிக்குள் ராஜன் ஒரு லட்சத்திற்குமேல் அதிபதியாய் இலங்கை மண்ணில் காலடிவைக்கப்போகின்றுன். அக்காவுக்கு ஏற்ற ஒரு மாப்பிள்ளையைத் தேடச்சொல்லி அம்மாவுக்கு வரைந்தனுப்பியிருக்கும் அந்தக் காகிதத்தை புழந்திப் புழந்தி அன்னம்மாக்கை ஒருவாறு படித்துமுடித்ததும் ..... சொல்லஞு புத்துணர்ச்சியும் புதுத்தெம்பும் பிறப்பது போலிருந்தது. அந்த ஆனந்த செய்தியை அண்ணரிடம் சொல்லவேண்டும்போல் இருக்க "பிள்ளை ஆனந்தி நான் ஒருக்கா உங்கம்மான் வீட்டுப்பக்கம் போயிட்டுவாறன். நீ கதவைச் சாத்திப்போட்டிரு என்ன?"

தாயின் குரலிஞல் சுயநினைவுக்கு வந்தவள் சோறு குழைந்துபோய் இருப்பதைக் கவனிக்கிறுள்.

அந்த நாளும் வந்தது. ராஜன் அந்தக் கரம்பன் கிராமத்திற்கு ராஜராஜ சோழனுய் வந்திறங்கினுன். ஊரே பெருமைப்படும் வண்ணம் பொருட்களாகவும் சேகரித்துக் கொண்டு வந்திருந்தான்.

"அக்கா... இதுகள் எல்லாம் உன் தனிக் குடித்தனத்திற்கு" தம்பியின் கேலிப் பேச்சிஞல் அபூர்வமாக அவள் மனம் சந்தோஷிக்கத் தொடங்கியது. அந்த நிலைவின் சுகத்தைக் கண்களை மூடி அனுபவிக்கும் அவள் சுகத்தில், அவன் ஒருகணம் அமிழ்ந்து போகிறுன்.

> ● பண்பாடு உடலிலும் உடையிலும் வளர்வதன்று. அது உள்ளத்தோடு ஆத்மவளர்ச்சியைக் காட்டும் பொருள்.
>
> — ஸாமர்ஸெட்மாம்.

அக்காவுக்குத் திருமணம்! அந்த நாளை அவன் ஆவலோடு எதிர்பார்க்கிறுன். காசை வீசியெறிய பொருத்தங்கள் இணைந்து எல்லாமே இணக்கத்தில் வர ஆனந்தியின் திருமணம்...அவளின் நீண்டகால எதிர்பார்ப்பு முப்பத்திநான்காவது வயதில் எல்லோரும் அதிசயிக்க நடக்கிறது. மணமேடையில் ஓமகுண்டலத்தின் புகைகளுக்கு நடுவே முழங்காலைக் கட்டிப்பிடித்து அமர்ந்திருந்தவள் மெல்லத் தலையை நிமிர்த்திப் பார்க்கின்றுள். மற்றவர்கள் நினைப்பார்கள் ஓமப்புகையால் அவள் கண்களில் நீர் பனிக்குதென மௌனித்துப்போன அவள் முன்னே ஒற்றைக் குச்சியாய் அங்கே ராஜன் நின்றுகொண்டிருந்தான். அவன் கண்களிலும் கண்ணீர், விசும்பல் — அது ஆனந்தக் கண்ணீர்.

ஆனந்தி புக்ககம் போனதும் வீடு வெறுமைக்கோலம் பூண்டிருக்கிறது. இத்தனை வருஷகாலமாய் வளையவந்த அவள் நடமாட்டம் வேறென்றுக்குச் சொந்த

மாய் வாழப் போய்விட்டாலும் அவளின் பிரிவு அந்த இரு உள்ளங்களையும் பேதலிக்கச்செய்தது. சுவிசேயரை முற்றத்தில்கொண்டு வந்து போட்டுவிட்டு, இருண்ட வானத்தின் அந்த ஒற்றை நட்சத்திரத்தில் பார்வையைப் பதித்த வாறு சயனித்திருந்தான் ராஜன்.

அன்னம்மாக்கை மகனின் காலுக்கருகில் வந்தமர்ந்தவாறே ஏதோ ஒரு யோசனையில் ஆழ்ந்து போயிருக்கிறுள். "என்ன அன்னம்! தாயும் மகனுமாய் முத்தத்திலே குந்திக்கொண்டிருந்துஎன்ன செய்யிறியள் "அண்ணரின்குரல் கேட்டு "வாங்க மாமா" என ராஜன் வரவேற்கிறுன்.

மாமனும் மருமகனும் வெளிநாட்டுப் பயணத்தின் சுவாரஸியத்தில் அமிழ்ந்து கிடக்கையில் தன்மனத்தில் லேசாய் நெருடிய அந்தக் கேள்வியை எப்படிக்கேட்பது எனத் தெரியாமல் திணறிறுள் அன்னம். அவளது உள்ளத்தின் தவிப்பை மேலும் வளர்க்க விரும்பாமலோ என்னவோ எப்ப "தம்பி கப்பலுக்குப் பயணமாகிறது! வந்தும் ஒரு மாதத்திற்கு மேலாகுது. கப்பல் நெடுக இங்கு நிக்குமே"... அண்ணரின் கேள்விக்கு மகன் என்ன சொல்லப் போகிருனே எனக் காதைத் தீட்டுகிறுள்.

அந்தக் கப்பல் வந்த பத்தாம் நாளே போயிட்டுது மாமா?

"அப்ப நீ எந்தக் கப்பலிலே போகப்போகிருய்? திரும்பி வருமோ அது?"

"இல்லை...... இனி நான் எந்தக் கப்பலிலேயும் போகப் போறதில்லை மாமா. எந்த இலட்சியத்திற்காக என் பயணத்தை மேற்கொண்டேனே அந்தஆசை நிறைவேறியபின் இனி எதற்காக இந்த மண்ணைவிட்டு—ஊரைவிட்டு உறவை விட்டு... என்ர அம்மாவைவிட்டு நான்போகவேணும்?"

"அந்த எண்ணத்தைக் கூடத் தோற்றுவித்தது இந்தச் சமுதாயத்தின் நீசத்தனம்தான், மனிதாபிமானங்கொண்ட எவனுவது என் அக்காவை வாழவைக்க முன் வந்திருந்தால் உயிர் போனாலும் இந்த மண்ணைவிட்டு நான் போயிருக்கமாட்டேன். அதைக் கிள

இளமை என்னும் பக்குவமான வயதில்தான் எந்தவித எண்ணமும் ஆழமாக வேரூன்றுகிறது.

வாழ்நாளில் இனிய பருவம் இளமை. இதை முதுமையில தான் உணருகிறேம்.

— கிளேடர்.

றியே என் வாழ்வை வளம்பெறச் செய்திருப்பேன். ஆனல் அக்கா, இளமை எதிர்பார்ப்புக்களை எதிர்நோக்கி ஏமாற்றத்தின் விளிம்பில் நிற்பவளுக்கு எத்தனையோ வயதிற்கு இளையவனை என்ஞல் இனி நேர்மையாக உழைத்து வருஷக் கணக்காய்ச் சேமித்து அவள் வாழ்வை வளம் பெறச் செய்யமுடியாத கட்டம் மாமா. சமுதாயத்தில் அவள்

தலைநிமிர்ந்து வாழ கடல்கடலாக ஓடினேன். அந்த நீலச்சாலையில் என் பயணம் சென்றதனால்...... அக்கா வாழ்ந்துவிட்டாள்...இனி எனக்கென்ன''......

''அம்மா! உங்களைப் பிரிந்த ஒவ்வொரு நிமிஷமும் யுகயுகாந்திரமாய்த் தொடர்பற்ற நிலையில் வாழ்வதுபோல் என் வாழ்வின் முடிவு ஒருவேளை இந்தக் கப்பலின் இஞ்சின்ரூமிலேமுடிந்து விட்டால்—சுறாவுக்கும் மீனுக்கும் பலியாகி ஓ! அம்மா உன் ஆசையை நிராசையாக்கிவிட்டிடுவனோ என எத்தனைநாள் தூங்காமல் அழுதிருப்பேன். சொந்த மண்ணின் காலடிவைக்கும் வரை நிச்சயமற்ற வாழ்வு அது. உன் அரசில் உன் அணைப்பில் வாழும் இந்த ஒவ்வொரு நிமிஷமும் நான் அடையும் நிம்மதி எவ்வளவு பணம் தேடினாலும் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் ஈடாகுமா? அதுதான் தாயின், தாய்நாட்டின் மகத்துவம். இதையறியாமல் ஏன்தான் இன்று பெற்றவளை—பிறந்த நாட்டை உதறிவிட்டுப் புதிய சிந்தனைச் சிறகுகளை விரித்துக்கொண்டு கடல்கடந்து பறக்கிறார்களோ? எப்படி அவர்களுக்கு இப்படி ஒட்டுறவற்ற தன்மை ஏற்படும். ஒருவேளை அவர்களுக்கும் என்னைப்போல் ஏதாவது நிர்ப்பந்தமோ'' வேதனைப்பொருமல் வார்த்தைகளாகச் சரிவதைக் கண்டு ''அப்ப இனி நீ போகப் போவதில்லையே ராசன்.'' அவரது எதிர்பார்ப்பு அவனுக்குப் புரியாததா? இரண்டு வருஷத்தில் உழைத்து இவ்வளவைக் கொண்டு வந்து கொட்டியவன் இன்னும் இரண்டு வருஷம் போய் உழைத்தால் இலட்சாதிபதியாகி தன் மகளும் அந்த இலட்சத்திற்கு ராணியாகிவிடுவாளே என்ற நப்பாசை தலைகீழாக - ''என்றாலும் நீ பிழைக்கத் தெரியாதவன் பொடியா. கையில் காசு புரண்டாத்தானே நாலுபேர் நம்மை கணிப்பாங்க... இங்க சுரண்டி சுரண்டி உழைத்தாலும் என்னத்தைக் குவிச்சிடப் போறே — ராசாப் போல அங்கபோய் சுழை சுழையாய் உழைக்கிறதை விட்டிற்று''

---

### தமிழ் வேந்தர் ஒழுக்கம்

இல்லற வாழ்க்கையை இன்று நடத்திபவர்

பிறபெண்டிர் சேர்க்கையை வெறுத்தனர்

சிறந்த நண்பர்களை விட்டுப் பிரியாதவர்

குடிகள் வருத்தங் காணப் பொறாதவர்

சான்றோராகிய புலவர் பெருமக்களின் பாராட்டுதலை மதித்தவர்

வறியவர்க்கு வழங்கி மகிழ்ந்தவர்

ஆட்சிப் பொறுப்பை அணுவளவும் தவறவிடாதவர்

இன்றைய மன்னர்கள் சுயவு செய்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் எழுதிய இலக்கிய அமுதத்தைப் படிக்கவேண்டும்

---

"வேண்டாம் மாமா; அந்த ஆசை எனக்கில்லே. இனி நான் எனக்காக வாழப்போகிறேன். எங்கு போய் உழைத்தாலும் உழைப்பு உழைப்புத்தான். அந்த உழைப்பை நம்மண்ணிலேசிந்தினு லென்ன ? ஒவ்வொருவரும் உங்க மாதிரி எண்ணம் கொண்டார்க ளென்றுல் வளங்கொழிக்கும் நம் ஜீவபூமி பாலைவனமாகத் தான் போய்விடும். மனித உணர்வு களுக்கு மதிப்பளிக்கத் தெரியாத இந்தச் சமுதாயமும் அந்தப் பண வீக்கத்தால் கோரமாகிப் போய் விடும் மாமா. நாம் நம் நாட் டிற்கு நல்லது செய்தால்தான் நாடும் நம்மை நன்ருக வைத்தி ருக்கும் என்று சொல்வார்கள். அதேபோல என் இறுதி மூச்சு உடலில் ஒட்டியிருக்கும் வரை இந்த மண்ணில்தான் உழைக்கப் போகிறேன்."

"விட்ட என் படிப்பைத்தொட ரப்போகின்றேன், "கோயிங் யூனிவர்சிடி"

"நாளை ஒருபட்டதாரியாகவெளி வந்து அம்மாவின் கனவை நன வாக்கி வாழ்வில் எந்தப் பொரு ளாதார போலித்தன மூச்சுக்கும் இடங்கொடுக்காமல் வாழப்போ கின்றேன்."

"எதையெதையோ எதிர்பார் த்த மாமாவின் மனம் ஏமாற்றத் துக்குள்ளாவதைக் காண மனம் பொறுதவனுக "அம்மா உனக்கு என்றுவது மருமகளாக வரப் போகிறவள்கூட என் எண்ணத் தைப் பிரபலிப்பவள்போல் ஒரு ஏழைப் பெண்ணுகத்தான் இருப் பாள். பெரிசாக எதையாவது இப்பவே கனவு கண்டுடாதை யுங்க" எனச்சிரித்துக் கொண்டே கூறியவன். "ஆமாம் ; அம்மா ஒரு ஏழைப் பெண்ணுக்கு வாழ்வு கொடுப்பதனுல் அதன் பின்ன ணியில் எத்தனை இதயங்கள் குளிர்கின்றன என்பதை அனுபவ ரீதியில் காண முடியாவிட்டாலும் அக்காவின் விழிச சாளாத்தில் வழிந்த அந்தக் கண்ணீர் பூக்கள் என் இதயத்தை நெருப்புப பூக் களாக மாற்றியிருக்கின்றதே."

> இளமை என்பது அணியா மல் புதிதாய் வைத்திருக்கக் கூடிய ஆடை போன்றதல்ல. இளமை உள்ளபோதே அதை அணிந்துகொள்ள வேண்டும். அன்றேல் அது விரைவில் கந் தையாகிவிடும்.
>
> பாஸ்டர்.
>
> இளமைத் துணுக்குகளைத் தொகுத்தவர்
> "முத்தாரம்"
> பாஷையூர்

மகனின் பேச்சைச் செவிமடுத்த அந்தத் தாயின் உள்ளமெல்லாம் பெருமிதமாகத் தனக்குள்ளே சிரித்துக் கொண்டது. மகள் கண்ணில் பட்ட அந்த ஒற்றை நட்சத்திரம் இப்போ அவள் கண் ணில் சிதறிய வானத்தில் மட்டும் தானு — மண்ணிலும் நட்சத்திரங் கள் முளைக்குமென மகனின் தலை யை வாஞ்சையுடன் மெதுவாகத் தடவிக்கொடுத்தது.

முற்றும்.

[யாவும் கற்பனை]

# தமிழர் பண்பாட்டைக் குறிக்கும் தைப் பொங்கல் விழா

## நன்றி பாராட்டும் தனிசிறந்த வாழ்க்கைமுறை

தமிழனின் தனிப்பண்பாட்டை விளக்கும் ஒரு விழாவாகும் பொங்கல் திருநாள். புதிய தானியம் அறுவடையாகி வந்தவுடன் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்து விழாக் கொண்டாடுதல் எல்லா நாட்டு மக்களும் செய்கின்ற ஒன்றுதான். ஆனால், பிற நாட்டார் விழாக்களில் விளைவு மிகுந்ததால் உண்டாகிய மகிழ்ச்சி வெளியாகிறதே தவிர, வேறு ஒரு பண்பாடும் வெளிப்படவில்லை. கையில் பொருள் கிடைத்தால் யார்தான் மகிழ மாட்டார்கள். ஆனால் கிடைத்த பொருள் யாரால் கிடைத்தது என்பது ஆராய்ந்து பார்த்தல் ஆயிரத்தில் ஒருவன் மட்டுமே செய்யக்கூடிய காரியம்.

### நன்றிப் பொங்கல்

அங்ஙனம் ஆராய்கின்ற ஆயிரம் பேர்களில் ஒருவன் மட்டுமே அப்பொருள் தனக்குக் கிடைக்க உதவியவர் நம்மைப் போன்ற மனிதர்களாயின் நன்றி பாராட்டும் ஒருவன் தன் நன்றியை வாயால் தெரிவித்து விடுகிறான். ஆனால் உதவி செய்தவர் நம்மைப் போல் மனிதராக இல்லாமல் விலங்காக இருந்துவிட்டால் யார் தாம் நன்றி பாராட்டுவர். பண்டு தொட்டே விலங்கினங்களையும் தம்மைப்போன்ற உயிர்கள் என்று மதித்து அவற்றிடமும் நன்றி பாராட்டிய பெருமை தமிழினம் ஒன்றையே சாரும். அந்நன்றி பாராட்டலின் அறிகுறியாகவே தமிழன் பொங்கல் திருநாளைக் கொண்டாடி வழிபாடாற்றினான்.

### மண்ணுக்குப் பொங்கல்

பொங்கல் அன்று புதிய பானையில் புதிய அரிசியை இட்டுப் பொங்கல் வைக்கின்றனர். கோடீஸ்வரன் வீட்டிற்கூட அன்று பொங்கல் இடுவது மண்பாத்திரத்தில்தான். எனவே தமிழன் தனக்கு ஆதாரமாகவும் வாழ்வாகவும் உள்ள மண்ணை எவ்வளவு மதித்துப் போற்றினான் என்று கூறவும் வேண்டுமா? மண்ணிலிருந்து தோன்றி மண்ணையே ஆதாரமாகக்கொண்டு வாழ்ந்து இறுதியிலும் மண்ணிடம்தான் போகவேண்டும்! என்ற நினைவை மறவாமல் இருக்கப்போலும் விழாக் கொண்டாடுகிற பொங்கலன்றுகூட மண் பாண்டத்தில் பொங்கல் வைக்கிறான்.

## கதிரவனுக்குப் பொங்கல்

உலகம் வாழவும் பயிர்கள் தழைக்கவும் தோன்றுந் துணையாக நிற்பவன் சூரியன் என்பதை இற்றைநாள் விஞ்ஞானம் உணர்த்தும் முன்னரே தமிழன் அறிந்திருந்தானுதலின் பொங்கல் பானையைத் திறந்தவெளியில் முற்றத்தில் கதிரவன் எதிரிலேயே வைத்துச் சோருக்கினுன். தன்னுதவியால் விளைந்த நெல் பொங்கலாவதைக் கண்டு மகிழச் சூரியனைவிட யாருக்கு முதல் உரிமை? எனவே முதல்நாள் பொங்கல் கதிரவனுக்கு நன்றி பாராட்டும் முகமாக அமைந்துள்ளது. அவன் கொடுத்த மழையாலும், அவன் தந்த சூட்டாலும் முற்றிவிளைந்த நெல், கரும்பு, வாழை முதலிய வற்றை முதன்முதலாக அவனுக்கே வழங்கி இதற்குச் "சூரியன் பொங்கல்" என்று பெயரும் இட்டான் தமிழன்.

## மாட்டுப் பொங்கல

கதிரவன் செய்த கண்ணுக்குத் தெரியாத உதவிக்குக் கண்காணும் முறையில் உதவிசெய்தது மாடு அல்லவா? வயலை உழவது தொடங்கிப் பலவகையில் மனிதனுக்கு உதவியது அன்றோ? பால் தந்து அவனை வளர்ப்பதுடன், எருவைத்தந்து அவன் வயலைக் காத்த பெருமை மாட்டுக்கே உண்டு. தாங்கள் பெருமுயற்சி செய்து பெறும் பயனைத் தாம் அனுபவியாமல் பிறருக்குப் பகிர்ந்திட்டுத்தரும் பெரியோர்களைப் போல் உழவுமுதல் அனைத்திலும் உதவிய மாட்டையும் தமிழன் மறவாமல் பொங்கலின் மறுநாள் "மாட்டுப் பொங்கல்" வைக்கிருன். வழிபாடாற்றுகிருன். மாட்டையும் மறவாமல் பொங்கலிட்ட தமிழன் நன்றிமறவாமைக்கு ஓர் எடுத்துக்காட்டன்றோ.

## கன்றுக்குப் பொங்கல்

மாட்டை மறவாத தமிழன் கன்றையும் மறவாமல் மூன்ரும் நாள் "கன்றுப் பொங்கல்" இடுகிருன். இளங்கன்ருகப் பிறந்ததில் இருந்தே மாட்டின் தலையெழுத்துமனிதனுக்கு உழைப்பதுதான் போலும். எனவே, அக்கன்றின் உழைப்பைக் கண்டு நன்றி பாராட்டப்போலும் கன்றுப் பொங்கல் என்றும் ஒருநாள் வைத்துள்ளான்.

"தமிழன் என்ருேர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு".

என்று நாமக்கல் கவிஞர் பாடியது தமிழனின் இந்நன்றி பாராட்டும் இயல்பை அடிப்படையில் கொண்டு தானு?

சூரிய பொங்கலோடு மாட்டுப் பொங்கலிட்டு நன்றி பாராட்டும் தமிழன் வாழ்க,

தமிழினம் வளர்க.

செல்வி M. சோபியா ஞானசோதி
அடம்பன்

# "தமிழர் பண்பாடு தொடர்ந்து வளரவேண்டுமாயின் அது ஈழத்திலும் தமிழ் நாட்டிலும்தான் முடியும்"



## தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகள் பேட்டி.

தமிழ்மொழியின் பெருமையை தரணியெங்கும் பரப்பியவர்களுள் அறிஞர் தனிநாயக அடிகளும் ஒருவர். 1941–ம் ஆண்டில் தமிழ் இலக்கியக் கழகத்தைத் தூத்துக்குடியில் நிறுவினார். 1951–ம் ஆண்டு "தமிழ்ப் பண்பாடு" எனும் ஆங்கில முத்திங்களின் வெளியீட்டை ஆரம்பித்து ஏறக்குறைய இருபது ஆண்டுகள் அதன் தலைமைப் பதிப்பாசிரியராக விளங்கி, தமிழர் பண்பாட்டை அனைத்துலகும் அறியச் செய்தார்.

1952-ல் நண்பர் சிலருடைய துணையுடன் கொழும்பில் தமிழ்ப் பண்பாட்டுக்கழகத்தையும், சென்னையில் தமிழ்ப்பண்பாட்டு அக்கடமியையும் ஆரம்பித்து அரும் பணியாற்றினர்.

1965-ம் ஆண்டு கீழ்த்திசை அறிஞர்கள் மகாநாடு புதுடெல்லியில் நடைபெற்றபோது அவர்களின் துணையுடன் அனைத்துலகத் தமிழாராச்சிக் கழகத்தை ஆரம்பித்து அக்கழக ஆதரவில் 1966-ல் மலேசியாவில் முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைச் சிறப்புற நடத்திவைத்தார்.

1970-ம் ஆண்டு "தமிழ்ப் பண்பாடும் நாகரீகமும்" என்ற தலைப்பில் ஆராய்ச்சியாளர் பலருடைய நூல்களிலிருந்து பகுதிகளைத் தெரிந்தெடுத்து தொகுப்பு நூலாக வெளியிட்டார்.

புதிய உலகம் சஞ்சிகையின் தமிழர் பண்பாட்டு இதழுக்காக அடிகளை அணுகியபோது அன்னார் தெரிவித்த கருத்துகளை இங்கு தருகின்றேன்.

1. தமிழர் பண்பாடு எத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்டது என்பதைச் சிறிது கூறுங்கள்?

பண்பாடு என்பது பண்டைத் தமிழ்ச் சொல்லாகிய பண்பிலிருந்து பிறந்தது திருவள்ளுவர் பல குறட்பாக்களில் பண்புஎனும் பொருளின் விளக்கத்தைத் தருகின்றார். அச்சொல்லிற்கும் பண்பாடு (Culture) எனும் சொல்லிற்கும் இத்துறையில் வேறுபாடு இல்லை. ஆனால், பண்பாடு எனும் சொல்லை முதலில் கையாண்டவர் ரஸிகமணி T. K. சிதம்பர நாத முதலியார் என்றே நம்புகிறேன். பண்பாடு என்பது கொள்கைகள், கோட்பாடுகள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள் இன்னோரன்ன துறைகளைச் சார்ந்தது. நாகரிகம் என்பதும தமிழ்ச்சொல் தான். அது வடமொழிச்சொல் அன்று. நாகரீகம் பெரும்பாலும் அறிவியல் துறைகளைப் பயன்படுத்தும் முறைகளைக் குறிக்கும். நாகரிகம் நகர் வாழ்க்கையிலிருந்து பிறந்தது; ஆரியர் திராவிட மக்களிடமிருந்தே நகர்கள் அமைப்பதையும் கற்றுக் கொண்டனர். (civis, civitas, civilization) நாகரிகம் என்ற சொல் திருக்குறளிலும், நாற்றிணையிலும் தோன்றுகின்றது. உழவுத்தொழில் நிலத்தைப்பண்படுத்துவதுபோல் மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு (பண்பாடு).

2. தமிழர் பண்பாட்டை உயர்த்திய நூல்கள் யாவை?

தமிழ் மக்களின் பண்பாட்டை உணர்த்தும் நூல்கள் பல, அந்தப் பணபாடு இலக்கிய இலக்கண நூல்களில் மட்டும் அடங்காது. நம் பண்பாட்டினை இலக்கியத்தில் மட்டுமல்ல கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை இசை. நாட்டிய, நாடகக் கலையிலும் காணலாம். பண்பாடு காலா காலத்திலவளர்ந்தும் சிறிதுமாற்றமடைந்தும் வருவதே இயல்பு, ஆயினும் அடிப்படைக் கொள்கைகள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள் மாறுமல்இருக்கும, தமிழர் பண்பாட்டின் தலைசிறந்த களஞ்சியங்களாக விளங்கும் நூல்கள் தொல்காப்பிய பொருளாதாரம், திருக்குறள், சிலப்பதிகாரம் என்றே கூறலாம்.

பிற்காலத்தில் தோன்றிய நூல்களும் பண்பாட்டை விளக்குகின்றன ஆயினும் இம்மூன்று நூல்களும் பிற்கால நூல்களிலும்

---

**தமிழ்தோய்ந்த தாள்கள்**

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மொரீசியஸ் ஆகிய நாடுகளில் தற்பொழுது வழக்கில் உள்ள காசுகளில் தமிழும் அச்சிடப்பட்டுள்ளன.

---

**வெற்றியினை ஈட்டுவீர்**

தமிழ் உமது முரசாகட்டும், பண்பாடு உமது கவசமாகட்டும், அறிவு உமது படைக்கலனாகட்டும், அறநெறி உமது வழித்துணையாகட்டும் உறுதியுடன் செல்வீர், ஊக்கமுடன் பணிபுரிவீர். ஏற்றமிகு வெற்றியினை ஈட்டுவீர்.

— அறிஞர் அண்ணா

சிறந்தவை என்றே கூறல்வேண்டும். திருவள்ளுவர் எத்துணை அழகாகக் கூறியுள்ளார் ;

> பண்புடையார் பட்டுண்டு உலகம்
> அதுஇன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்.

தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப்போல் வேறெந்த மொழியிலும் காண்பது அரிது. பக்தியும் தமிழ்ப்பண்பாட்டின் சிறந்த அறிகுறியென்றே நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

### 3. தமிழர் பண்பாட்டின் சில கொள்கைகள் எவை?

பரந்த உலக மனப்பான்மை ஒருகொள்கை ஆதலால்தான் புறநானூற்றில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றும் திருவள்ளுவத்தில் "யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை. பிறரன்பு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு. என்கடன் பணி செய்து கிடப்பதே, அகத்தினை புறத்தினை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் என்னும் கொள்கை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் அரியசில கோட்பாடுகளென்றே கூறலாம். இவ்விலட்சியங்களைத் தமிழ் இலக்கியங்களில் பன்முறை தேற்றம் கொடுத்து வற்புறுத்துவதைக் காண்கின்றோம். புறநானூற்றில் "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற செய்யுளும், "இம்மைக்காவது மறுமைக்காமென" என்ற செய்யுளும் குறிப்பிடத்தக்கவை. (புறம், 134, 182) மேலும், யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்.

### 4. தமிழர் பண்பாடு காலத்துக்குக் காலம் மாற்றம் அடைந்திருக்கிறதா?

மாற்றம் அடைந்திருக்கிறது தான். ஆனால், சிறிய அளவில் தான். அடிப்படைக் கொள்கைகளில் தமிழர் பண்பாடு மாற்றம் அடையவில்லை. தமிழ் நாட்டிற்கு பிறநாட்டுத் தொடர்பும், பிறமக்கள் தொடர்பும் எப்பொழுதும் இருந்துள்ளது. சங்ககாலத்துக்குப் பின் குடியேறிய சமணர், புத்தர், பார்ப்பனர், ஐரோப்பியர் அதனை மாற்றவில்லை. அவர்களும் தமிழ் மரபினைத் தழுவியே தம் சமயங்

களைப் பரப்ப முயன்றனர். சிலப்பதிகாரம் சமணரால் இயற்றப் பெற்ற நூல். திருவள்ளுவரும் சமணராக இருந்திருக்கலாமென்று பலர் கருதுகின்றனர்.

மணிமேகலை எனும் புத்தகாப்பியத்தில் தமிழ் பக்திச்சுவை மிளிர்கின்றது. கம்பர் வடமொழி இலக்கியத்தைத் தழுவித் தம் காப்பியத்தைப் பாடினாராயினும், தமிழ் மரபைக் காத்துள்ளார். வீரமாமுனிவர்கூட, தேம்பாவணியிலும் திருக்காவலூர்க் கலம்பகத்திலும் தமிழ்ப் புலவரைப் போலவே பாடியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்கள்கூட (உ+ம்) பாரதி, பாரதிதாசன்) இந்த மரபைக் கைவிடவில்லை. தமிழ்மக்கள் தொன்மை மரபுகளை என்றுமே காத்துவருகின்றனர். பிறநாட்டார் ஆட்சி செலுத்திய காலத்திலும், பிற மொழிகளையும் இலக்கியங்களையும் பயின்ற காலத்திலும் தமிழ்மக்கள் வாழையடி வாழையாக வந்த தம் மரபுகளைத் தழுவிக் கொண்டே வந்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த நூலாசிரியர் பலர் ஆங்கிலத்தை நன்கு கற்றவர்கள். சுப்பிரமணிய பாரதி, மறைமலையடிகள், விபுலானந்தர், வையாபுரிப் பிள்ளை, ரா. பி. சேதுப்பிள்ளை போன்றவர்கள் ஆங்கில இலக்கியத்தையும் நன்கறிந்தவர்கள். அவர்களுடைய தமிழ் நூல்கள் பிறமொழிப் பயிற்சியால் வளம் பெற்றன.

ஆனால், அவர்கள் தமிழ் மரபைக் காத்துள்ளனரேயன்றி, இழக்கவில்லை. இன்று தமிழ் மக்கள் சிலருடைய ஆடை, போக்குவரத்து முறைகள், இல்லங்கள் அறிவியல் வாய்ப்புகளைக் கடைப்பிடித்தாலும் தமிழ்ப் பண்பாட்டை அவர்கள் அழிக்க முயல்வதில்லை.

**தமிழ் மொழியின் ஆற்றல்**

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மிகப்பெரிய இனத்தவரும், ஆற்றலும் நன்கு மதிக்கற்பாடும் உடையவரும், வழிபாட்டிற்கு உரியவருமான ஆரிய மக்களின் சமஸ்கிருத மொழியை எதிர்த்து நின்று தம் ஆட்சியை நிலைநாட்டி வந்துள்ள திராவிட மொழிகள் தம் இடத்தைப் பற்ற வரும் வேறு எம்மொழி முயற்சியையும் இனிவரும் காலங்களில் எதிர்த்து அழித்துவிடும்.

—டாக்டர் கால்டுவெல்

## 5. தமிழர் பண்பாடு வேறெந்த நாடுகளில் பரவியுள்ளது?

இவ்வினாவுக்கு விடையளிக்கு முன் வேறொரு வரலாற்று உண்மையைக் கூறவிரும்புகிறேன். தமிழர் பண்பாட்டை நாம் சிந்துவெளி, மொகஞ்சதாரோ, ஹாரப்பா நாகரிகத்துடன் இணைக்கலாம். அந்நாகரிகத்தின் சின்னங்கள் பிற்காலத்தில் தோன்றிய கலைகளை

ஒருவாறு விளக்குகின்றனா. தமிழர் பண்பாடும் நாகரிகமும் பல்லவச்சோழர் காலத்தில் கீழ்த்திசை நாடுகள் பாலி, சாவகம், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகட்குப் பரவியுள்ளது. தாய்லாந்து நாட்டில் திருப்பாவை திருவெம்பாவை விழாக்களைக் கொண்டாடி வந்தனர். தேவாரம், திருவாசகங்களிலிருந்து செய்யுள்களை மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடினர். இன்றும் பாங்கொக் நகரிலும் தக்குவப்பா எனும் இடத்திலும் பார்ப்பனர் சிலர் குடியிருக்கின்றனர் இவர்கள் தமிழை அறியாததால் இப்பாக்களை தாய் எழுத்தில் எழுதிப் படிக்கின்றனர்

கம்போடிய நாட்டில் உள்ள மாபெரும அரண்மனைகளாகிய அங்கோவாட், அங்கோர்தொம் என்பன பல்லவ முறையைத் தழுவி எழுப்பப் பெற்றன. சாவகத்திலும் உள்ள கோயில்கள்சில சைவ சித்தாந்த கோட்பாடுகளைக் கூறுவதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

| தமிழர் படைகள் |
| --- |
| தேர்ப்படை, யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை, மூலப் படை கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப் படை, பகைப்படை, விலைப் படை, விற்படை, வேற் படை, மற்படை, வாட் படை. |

நம் காலத்தில் தமிழருடைய செல்வாக்கு பிறநாடுகளில் குன்றியிருப்பதால் இவ்வரலாற்றுச் சின்னங்கள் அருகிப் போகின்றன தமிழ்ப்பேசும் இனத்தார் மொரீஷியஸ், ரீயூனியன், தென்னாபிரிக்காவிலும் கரிபியன் தீவுகளிலும் குடியேறியிருந்தாலும், அவர்களுடைய செல்வாக்கு பிறபண்பாடுகளைமாற்றவில்லையென்றே சொல்ல வேண்டும். மலேசியா, சிங்கப்பூரிலும் மேலே குறிப்பிட்ட இதர நாடுகளிலும் இக்கால இளைஞர் சில சமய கோட்பாடுகளைத் தழுவினாலும், வருங்காலத்தில் இவர்களின் வழித்தோன்றல்கள் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றுவார்களா என்பது ஐயத்துக்கே இடமானது. தமிழர் பண்பாடு தொடர்ந்து வளரவேண்டுமாயின், அது ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் தான் முடியும்.

6. **கிரேக்க நாகரிகமும், பண்பாடும், உரோம நாகரிகமும் பண்பாடும் என்ற வரிசையில் தமிழர் நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் எத்தகைய இடமுண்டு ?**

தமிழர் பண்பாட்டைப் பிற இனத்தார் பண்பாட்டோடு ஒப்பிடுவதுஎளிதன்று. மேலும் தமிழருடைய எத்தனையோ வரலாற்றுச் சின்னங்களும், இலக்கியங்களும் அழிந்துபோயின. ஆயினும் ஒழுக்கத்துறையில் தமிழர் தனிஇடம் வகிக்கின்றனர் என்று பலர் கூறியிருக்கின்றனர். மேலும் தமிழ்ப் பக்தி இலக்கியம் இணையற்ற செல்வம்.

உலகின் ஒழுக்க இலக்கியங்களை நன்கு ஆராய்ந்து நூல்கள் யாத்த மகான் அல்பேட் சுவைட்சர் இவ்வுலகில் திருக்குறளைப் போன்ற நீதிநூலொன்றைக் காண்பது அரிதென்று குறிப்பிட்டுள்ளார். கிரேக்கருடைய நாடக இலக்கியங்களைப் போல நமக்கு நாடகங்கள் கிடைக்கவில்லை. பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்ற அரசியல் ஞானிகள் தமிழ்நாட்டில் பிறக்கவில்லையென்றே சொல்ல வேண்டும். ஆயினும் சோழருடைய ஆட்சியைப் பாற்றுதவரில்லை. கட்டிடக் கலையில் நம்மைப்போல் கிரேக்கரும் உரோமரும் சிறந்து விளங்கினார்கள். குடியாட்சியை வளர்த்தபெருமை கிரேக்கருக்கும், சட்டத்தை வளர்தத பெருமை ரோமருக்கும் உண்டு.

நாகரிகங்களை ஒப்பிடுவது பண்பாட்டை ஒப்பிடுவதிலும் எளிது. உலகில் சிறந்த நாகரிகங்கள் சில தோன்றி மறைந்துள்ளன. எகிப்தியருடைய நாகரிகம், அசிரியா மொசப்பத்தேமியா முதலிய மாநிலங்களில்தோன்றியநாகரிகம் மறைந்துபோயின. ஆனால் தமிழருடைய தொன்மை வாய்ந்த நாகரிகமும் பண்பாடும். சீன நாகரிகமும் பண்பாடும்போல இன்றும் நிலைத்துள்ளன.

இக்காலத்தில் விஞ்ஞானத்தின் பயனாக மேல்நாட்டார் நாகரிகத்தில் முன்னேறி உள்ளனர். நாகரிகம் பண்பாட்டிலும் காலாகாலத்தில் மாற்றமடைவது இயல்பு. விஞ்ஞானப் பயனைத் தமிழ் மக்களும் கையாண்டு வருவதால் அவர்களுடைய நாகரிகமும் மாற்றமடைந்து வரும்.

**7. திருச்சபை வழிபாட்டு முறைகளுள் தமிழ்ப் பண்பாட்டு முறைகள் புகுத்தப்பட்டுவருவது பற்றிந் தங்கள் கருத்து யாது?**

திருச்சபையில் அதனை நிறுவிய காலந்தொடங்கி, நாடுகளுக்கு நாடு வேற்றுமைகளைக் காட்டி

**தமிழ் இசைத்த யாழ்களும் அவற்றின் தந்திகளும்**

| | | |
|---|---|---|
| நாரதப் பேரியாழ் | — | 1000 தந்திகள் |
| சீசகயாழ் | — | 100 தந்திகள் |
| பேரியாழ் | — | 21 தந்திகள் |
| மகரயாழ் | — | 17 தந்திகள் |
| தும்புருயாழ் | — | 9 தந்திகள் |
| செங்கோட்டியாழ் | | 7 தந்திகள் |
| சகோடயாழ் | — | 4 தந்திகள் |
| மருத்துவயாழ் | — | 1 தந்தி |

யுள்ளன. சத்தியங்களில் வேறுபாடு இருக்கவில்லை. இருக்கவும் முடியாது.

யூதர் தம்மொழியில் வழிபட்டார்கள். கிரேக்கர் தம்மொழியில் வழிபட்டார்கள். எகிப்தியர் தம் சொந்த மொழியில் வழிபாடு நடத்தினார்கள். அவர்கள் வழிபாட்டிற்கு அணிந்த ஆடைகளும் பாடிய பாடல்களும் தழுவிய சடங்குமுறைகளும் அந்தந்த நாட்டின் பழக்கவழக்கங்களையே தழுவின.

இலத்தீன் திருச்சபையில் உரோமைய மரபே தழுவப்பெற்று வந்தது. அவ்வொரே மரபு உலகமெங்கும் பரவிய இலத்தீன் திருச்சபையின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் காப்பாற்றி வந்துள்ளது. ஆனால், இந்தக் காலத்தில் திருச்சபையின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்கு வேறு எத்தனையோ வழிகள் உள்ளன.

ஒவ்வொரு இனத்தாரின் மொழியிலேயும் வழிபாட்டை நடத்துவது இன்று பெரும் பயனைத் தருகின்றது. இவ்வாறே தமிழிசையையும் தமிழரின் மங்கலப் பொருட்களையும் பழக்கவழக்கங்களையும் கத்தோலிக்க வழிபாட்டில்தழுவுவதில் யாதொருபிழையுமில்லை. மங்கல விளக்கேற்றுவது, மலர்தூவுவது, மாலையணிவது, நறும்புகை காட்டுவது இவையெல்லாம் தமிழர் மரபைச் சார்ந்தவை. திருச்சபையின் சடங்குமுறைகள் அந்தந்தநாட்டின் பண்பாட்டைத் தழுவுவதுதான் சாலச் சிறந்தது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் இம்மாற்றங்களை விரும்பியுள்ளது. திருச்சபை ஓர் இனத்தாரின் பண்பாட்டைக் காப்பாற்றி வளர்த்து வருகின்றது.

> ### புலிப்பல் அணி
>
> போர்ஒழிந்த காலங்களில் கடுங்கைமறவர் காட்டினுள்ளே சென்று கடும் புலிகளைக் கொன்று அவற்றின்வாயைக் கிழித்துப் பற்களைத் தகர்த்தெடுப்பர். வெற்றிப் பரிசாகிய அப்பற்களைக் கொண்டு தம் குலமாதருக்கு அணிகலன்கள்செய்துகொடுப்பர். எம் குலத்தமிழ்ப் பெண்கள் பெருமையுடன் அணியும் அணிகலன்களும் அவையே.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இந்தக்கொள்கை பெரும் விளம்பரம் பெற்றுள்ளது. இலத்தீன் மரபிலிருந்து சொந்தநாட்டின் மரபுக்கு மாறும் இந்தக்காலம் ஓர் ஆய்வுக் காலமாகவும் தேர்வுசெய்யும் காலமுமாக வே கருதப்படல் வேண்டும். இவ்வாய்வுக்காலத்தில் பொருந்தும் மாற்றங்களெவை, பொருந்தாத மாற்றங்களெவை என்று விதிப்பது நாட்டின் ஆயர்களைப் பொறுத்தது. அவர்கட்கு ஆராய்ச்சியாளர்கள் இறைநூல் வல்லுநர்கள் வழிபாட்டு வல்லுநர்கள் வழி காட்டுவார்கள்.

இந்த மாற்றங்களைச் செய்வதில் இரு கருத்துக்களை நாம் மனதில் கொள்ளவேண்டும். நமக்கு தமிழ்நாட்டு மரபு இருப்பதுடன் இருபது நூற்றாண்டுகளாக திருச்சபையில் வளர்ந்த மரபும் உளது.

என்னைப் பொறுத்தவரை தரையிலுட்கார்ந்து காவிப் போர்வையொன்றைப் போர்த்து திருப்பலி ஒப்புக்கொடுப்பதில் யாதொரு விருப்பமுமில்லை. இந்துக் குருக்கள் வெறும் மேலோடேயே வழிபாடு செய்கின்றார்கள். அவர்களுடைய கோயில்களில் குருக்களும் மக்களும் சேர்ந்து பலி ஒப்புக்கொடுப்பதில்லை. நம் கோவில்களில் குருவை வழிபாட்டிற்கு வரும் மக்கள் அனைவரும் காணவும் வேண்டும், கேட்கவும் வேண்டும்.

உரோமைய திருப்பலி ஆடைகள் எவ்வளவோ அழகுள்ளன. தூய்மை தருவன. ஆதித்திருச்சபையின் காலந்தொடங்கி மரபாக வருவன.

தமிழ் இசையை நாம் முற்றிலும் கடைப்பிடிக்கவேண்டும். என் வயதுள்ளோர் தூய தமிழிசையையே பெரும்பாலும் விரும்புவர். ஆனால் இளைஞர் துள்ளலோசைகொண்ட பொப் இசையை வழிபாட்டில் விரும்பி வருகின்றனர். இளங்குருக்கள், கன்னியர் சிலவேளைகளில் தரையிலுட்கார்ந்து வழிபாடு செய்வதை விரும்புகின்றனர்.

ஆதலால் திருச்சபையின் இளந்தலைமுறையின் விருப்பு வெறுப்புக்கும் இடங்கொடுக்கிறது திருச்சபை. ஆனால் இந்து சமய வழிபாட்டின் மரபுகளையெல்லாம் நாம் தழுவமுடியாது. ஏனெனில் நம் வழிபாட்டின்

### தமிழர் முரசங்கள்

தமிழ்நாட்டு முடிமன்னர்க்கு மூன்று முரசங்கள் உண்டு. ஒன்று நீதி முரசு, மற்றொன்று கொடை முரசு, இன்னொன்று படை முரசு. வெம்மைவாய்ந்த புலியொன்றைத் தன் கொம்பினால் தாக்கிக்கொன்ற பெருங்காளை மாட்டின் தோலினாலேயே இந்த வீரமுரசம் செய்யப்படும். போர்இல்லாத காலங்களில் அரண்மனையில் ஒரு மணிமஞ்சத்தில் அது பாதுகாப்பாக வைக்கப்படும். மன்னன் படையெடுக்கும்போது அம்முரசம் முன்னே கொண்டு செல்லப்படும்.

இவைபோக, போர்க்களத்தில் வீரர்களுக்கு வெறியூட்டும் இசைக்கருவிகளாக 'பம்பம்' என ஒலிக்கும் பம்பையும், 'முர் முர்' என ஒலிக்கும் முருடும், கரடிபோல் கத்தும் கரடிகையும் ஒலிக்கப்படும்.

அமைப்பு வேறு. அவர்கள் வழிபாட்டின் அமைப்பு வேறு, கோயில் அமைப்பு வேறு.

8. தமிழ்பண்பாடு என்றுகூறும்போது அதில் இந்துமதத்தின் செல்வாக்கு மிக அதிகமாக உள்ளது தமிழ்—சைவம் இரண்டும் ஆரம்பத்திலிருந்து பின்னிப் பிணைந்தே வந்துள்ளன. ஆகவே கிறிஸ்தவ வழிபாட்டில் தமிழ் மரபைப் புகுத்தும்போது இந்துமரபே கையாளப்படுகிறது என்ற கூற்றுக்கள் பற்றிய தங்கள் அபிப்பிராயம் யாது?

சைவமும் வைஷ்ணவமும் தமிழ்ப் பண்பாட்டில் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன என்பது உண்மை. சமயம் பண்பாட்டின் சிறந்த பகுதியெனபதை யாவரும் ஒப்புக்கொள்வர் ஆனால் தமிழர் வரலாறு ஆரம்பமாகும் காலந்தொடங்கி வேறு சமயங்களும் தமிழ்ப்பண்பாட்டில் இடம் பெற்றுள்ளன எனவே தமிழ் நாட்டிற்கு வந்த ஒவ்வொரு சமயமும் தமிழர் பண்பாட்டைத் தனக்கு ஒவ்வும் வகையில் பயன்படுத்தியுள்ளது

சமணர், புத்தர், கிறிஸ்தவர், இஸ்லாமியர் அவ்வாறு செய்துள்ளனர். செய்துவருகின்றனர், சைவ வைஷ்ணவ வழிபாட்டில் தமிழரல்லாதவராகிய பார்ப்பானர், ஆரியர் மரபும் வடமொழி மரபும் இடம்பெற்றுள்ளன.

எனவே நம் சத்தியங்கள் நமக்கேசொந்தமானவை. கிறிஸ்துநாதர் நம் முழுமுதற் கடவுளென்பதில் நாம் ஒரு மாற்றமும் செய்வதில்லை. முன்னொரு காலத்தில் நம் பண்பாட்டை அறியாத ஐரோப்பிய குருக்கள் இருந்தபோது நம் பழக்கவழக்கங்கள் மேல்நாட்டு முறைகள் சிலவற்றைப் பின்பற்றி வந்துள்ளன.

அந்தக்காலத்திலும், திருமணச் சடங்கிலும் ஏனைய வாழ்க்கையின் குறிப்பிட்ட காலங்களிலும் கத்தோலிக்க தமிழர் தம் பண்பாட்டுச் சின்னங்களைக் கைவிடவில்லை. தாலிகட்டுவது பண்டைக்கால தமிழர் மரபு அதனைக் கத்தோலிக்க மக்கள் எப்பொழுதும் தழுவி வந்திருக்கின்றனர். சைவ, வைஷ்ணவ வழிபாட்டில், இலக்கியங்களில், கலைகளில் தழுவக்கூடிய மரபுகளிருந்தால் அவற்றைத் தழுவுவதில் யாதொரு குற்றமுமில்லை. தமிழ் மரபுக்கு நாம் புது கருத்துக் கொடுத்து வருகின்றோம், பொட்டு வைக்கும் கத்தோலிக்கர் நெற்றிக் கண்ணைப்பற்றி நினைப்பதில்லை. தைப்பொங்கல் விழாவை கத்தோலிக்கர் சிறப்பாகக் கொண்டாடவேண்டும். அதற்கு நம்முடைய கருத்துக்களைக் கொடுக்க வேண்டும். தமிழ்ப்பக்தி இலக்கிய மொழி நம் வழிபாட்டு மொழியில் ஒலிக்க இன்னும் எவ்வளவோ இடமுண்டு.

நான் தமிழன் என்றமுறையில் தமிழர் எந்தச் சமயத்தவராயிருந்தாலும் அவர்களுடைய சொத்துக்களுக்கு நானும் வாரிசாகவிருக்கிறேன். சைவமும் தமிழும்

## தமிழரின் வாழ்த்தும் பண்பும்

தமிழரின் மனம் அழகுகண்டால் மயங்கும். துன்பம் கண்டால் உழலும் மகிழ்ச்சிகாணுமிடத்தோ துள்ளும் !

சீரிய செயல்களில் பாராட்டவும், வீரம் காண்கையிலே எழுச்சிகொள்ளவும், தமிழர் மனம் பன்னெடுங்காலமாகவே பண்பட்டிருக்கிறது. அந்தப் பண்பு எத்துணை உயர்வானது என்பதை அறிய தமிழர் வாழ்த்தும் முறையை மேற்கொண்டதில் இருந்து மட்டுமல்ல; மக்களை மட்டுமேயன்றி, இயற்கையை அவர்கள் வாழ்த்தி இன்புற்றதில் இருந்து நன்கு காணலாம். ஞாயிறு, திங்கள், மாமழை, மலர் அருவி, ஆடும்மயில், இசைபயிலும் குயில், கொஞ்சிவிளையாடும் கிள்ளை என்பனவற்றை எல்லாம் வாழ்த்தினர் வீரத்தை வாழ்த்தினர், கொடைத்திறனை வாழ்த்தினர், புலமையை வாழ்த்தினர், வாழ்வுக்குச் செல்வமான எதனையும் வாழ்த்துவதை தமிழர் மரபு ஆக்கிக்கொண்டனர்.

● ● ●

வாழ்க என்பது தமிழ்ச்சொல் மட்டுமல்ல, தமிழ்ப்பண்பு கனிந்த மனத்துடன் மற்றவரின் வாழ்க்கை செழித்து அவர் இன்புற்று இருப்பது அவர்க்கு மட்டுமல்லாமல் சமூகத்துக்கு நல்லாசி என்பதால், வாழ்த்துவது தமிழ்மரபு. அந்தச் சொல்லிலே இசை ஒலியும் இதயக் குழைவும் இருப்பதனை இதயமுள்ளோர் எவரும் உணருவர்.

—அறிஞர் அண்ணா,

இரு கண்களென்று கூறுவதுபோல் எனக்கு த்தோலிக்கமும் தமிழும் இரு கண்கள்.

**9. திருவழிபாட்டில் கொண்டு வரப்படும் சில மாற்றங்களால் மக்கள் சிலரிடம் மயக்கமும் வெறுப்பும் எதிர்ப்பும் தோன்றியுள்ளன. இத்தகைய மனநிலையை மாற்றுவதற்கு வழி என்ன என்று கருதுகிறீர்கள் ?**

மாற்றங்கள் சிலவற்றால் மனநிலை வேறுபட்டிருப்பது இயல்பு. பல ஆண்டுகளாகத் தமிழர் பண்பாட்டு வழக்குகளையே அஞ்ஞானிகளின் வழக்குஎன்று ஒதுக்கிவைத்துள்ளோம். மாற்றங்களைச் செயல்படுத்துமுன் அவற்றின் கருத்துக்களை மக்களுக்கு நன்றாக விளக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு மாற்றத்துக்குப் பங்கில் பெரும்பான்மையோருக்கு உடன்பாடு இல்லையெனில் அம் மாற்றத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவது நல்லது. முதியார் மாற்றங்களை விரும்பாமல இருக்கலாம். ஆனால், திருச்சபையின் நோக்கத்தையும், மாவட்ட ஆயரின் தீர்ப்பையும் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆய்வுமுறையில் நடத்தப்படும் ஒருசில வழிபாட்டு முறைகள் எனக்கே வெறுப்பை உண்டாக்குகின்றன. புதுச் சடங்குகளைப் புகுத்துமுன் அவை எங்ஙனம் நம் சததியங்கட்கும் மரபிற்கும் பொருந்துமென்று நன்கு ஆராயவேண்டும்.

---

பேட்டி :

சாமுவேல் பெனடிக்ற்

---




# தமிழர் பண்பாட்டில் தாய்மைக்குச் சமத்துவம்

ஆரம்பகாலத்துத் தமிழர் சமுதாயத்திலே தாய்வழி மரபே பேணப்பட்டுவந்ததாகத் தெரிகிறது. தமிழ்ப் பெண்கள் ஆடவருடன் தோளோடு தோள்நின்று வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு ஈடுகொடுத்தனர். பெண் வீரத்திலும் அறிவிலும் ஆணுக்குச் சற்றும் பின்வாங்கவில்லை என்பதை—முறம் கொண்டு புலி விரட்டிய வீரப்பெண்ணின் செயலினாலும், செங்களத்தில் மாண்ட தன் மகன் நெஞ்சில் விழுப்புண் பட்டே மாண்டான் என்பதைக் கண்டறியும்வரை ஓய்ந்திராத தாயின் செயலினாலும், 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானைச் இறிதேனும் புல்லாளே ஆயர்மகள்' என்ற பண்டைத்தமிழ்க்கூற்றாலும்; ஔவை, காக்கைபாடினி போன்ற பெண் புலவர்களின் வாழ்க்கையாலும் அறியக்கிடக்கிறது.

இவ்வாறு தமிழர் பண்பாட்டில் பெண் ஆணுக்குச் சமமான நிலைபெற்று வாழ்ந்திருந்தபோதிலும், பின்னர் ஆரிய பண்பாட்டின் ஊடுருவலால் ஏற்பட்ட பல விளைவுகளுள் பெண்ணினம் பின்தள்ளப்பட்டமையும் அமைந்தது.

சமத்துவத்துடன் வாழ்ந்த அன்னையர் பெற்று வளர்த்த மக்கள் வீரர்களாகத் திகழ்ந்தனர். பின்னர் அடங்கி ஒடுங்கிப் பின்வாங்கிய மாதர்களின் மக்களில் வீரம் உடையவர் எத்தனை பேர்? அடங்கி ஒடுங்கிக் கோழையாக வாழும் பெண் வீரமக்களுக்குத் தாயாக முடியாது எனவே,—

மங்கையர் குலத்தின் நியாயபூர்வமான சமத்துவமும் சுதந்திரமும் சொல்லளவிலன்றி மனத்தளவிலும் தமிழ் மக்களிடம் உண்மையான பெருமைக்குரிய வீரம் உண்டாகப்போவதில்லை.

— 'ஷிவசக்தி'

மணிக்கதை

# பரிசு

அன்று எனது பெயருக்கு வந்திருந்த அந்த மடலைப் பிரித்துப் படித்தேன். தன்னைப் பற்றியும், தனது நாட்டைப் பற்றியும் விபரித்து எழுதியிருந்த எனது நண்பி இறுதியாக எனது புகைப் படம் ஒன்றையும் கேட்டு எழுதியிருந்தாள். அவளின் அந்த அன்பு வேண்டுகோளை நிராகரிக்க முடியாத நான் அடுத்த ஒரு சில வாரங்களின் பின்பு பாஸ்போட் அளவின தாகவுடைய எனது புகைப்படம் ஒன்றை அனுப்பி வைத்தேன்.

அதனைப் பெற்றுக்கொண்ட எனது நண்பியும் எனது அழகை வெகுவாகப் பாராட்டி மடல் எழுதியிருந்தாள். அதில்.....,

"அன்புமிக்க சாந்தி! உனது அன்பு மடலும் புகைப்படமும் என்னை வந்தடைந்தது. உன் புகைப்படம் என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. அதிலும் நீ ஒரு பேரழகி என்பதனை உனது முத்துப்பல் சிரிப்பினுல் நீ எடுத்துக்காட்டியேவிட்டாய். ஆயினும் அந்த போட்டோவில் ஒரு குறை! நீ அணிந்திருக்கும் உடை ஆங்கிலேயப் பாணியைப் பின்பற்றிய தாகவே அமைந்துள்ளது. நீயோ ஒரு தமிழ்ப் பெண். அப்படியிருக்க நீ ஏன் ஆங்கிலேயப் பாணியைப் பின்பற்ற வேண்டும். ஒருவேளை உனது பண்பாட்டிற் கொப்ப தமிழ்ப் பெண்களின் சேலை கிடைக்காமல் விட்டிருக்கலாம். எனவே, இத்துடன் எனது அன்புக் காணிக்கையாக ஒரு புடவையை உனக்கு அனுப்பி வைப்பதில் நான் பெருமையடைகிறேன். அத்துடன் எனது புகைப் படத்தையும் உனக்கு பரிசளிக்கிறேன். தமிழ்ப் பண்பாடு என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

நன்றி.

இவண்
உனது உயிரான நண்பி
மேரி

மடலைப் படித்து முடித்த நான் அத்துடன் வந்திருந்த அந்தப் புகைப்படத்தை நோக்கினேன். என்ன ஆச்சரியம்! தழையத் தழையப் புடவைகட்டி, தலை நிறைய பூச் சூடி ஒரு தமிழ்ப் பெண் என் கண்முன்னே .... சே.... என் கண்ணை பட்டுவிடும் போலுள்ளதே! என்ன இது? மேரி ஆங்கிலேயக் கிறிஸ்தவப் பெண் அல்லவா! நமது தமிழ்ப் பண்பாடு அவளைக் கவர்ந்தது என எழுதியிருந்தாளே! நான் எனக்குள் வெட்கித் தலை குனிகின்றேன். நான் தமிழ்ப் பெண்ணாக இருந்தும் ஆங்கிலேயப் பாணியைப் பின்பற்றினேன். அவளோ ஆங்கிலேயப் பெண்ணாகவிருந்தும் தமிழ்ப் பண்பாட்டைப் பின்பற்றியுள்ளாளே! இதுதான் மனித மரபா! இல்லை இல்லை. தமிழுக்கு இந்தளவிற்கு மதிப்புண்டு அல்லவா! வெட்கிய நான் அவள் அனுப்பிய சேலையை அணிந்து அவளுக்காக ஒரு புகைப்படம் எடுத்து அனுப்பி வைக்கிறேன் ...

S.புஸ்பராணி அந்திரேஸ் முதலியார்

# கருத்து மோதல்

## தனியார் கல்வி நிலையங்களினுல் நன்மைகளே அதிகம்

"மன்னனும் மாசறக்
கற ருனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன்
சிறப்புடையன்
மன்னர்க்குத் தன்தேசமல்லாற்
சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்
லாம் சிறப்பு."

கல்வியின் சிறப்பைப் பற்றி மேலேயுள்ள செய்யுள் நன்கு விளக்குகின்றது. அப் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமான இக்கல்வியானது ஒருவனது இளம் வயதில் இருந்தே முதலில் பெற்றோர்கள் மூலமாக வீட்டிலும், பின்னர் ஆசிரியர்மூலமாகப் பாடசாலைகளிலும், விரிவுரையாளர் மூலமாக மிகவும் திறமையான தனியார் கல்வி நிலையங்களில், பெரும்பாலானேர் திறமையாகக் கல்வியூட்டப்படுகின்றார்கள் என்றால் அதை எவரும் மறுத்துரைக்க முடியாது.

ஏனென்றால் அங்கு மிகவும் அனுபவம்மிக்க திறமைசாலிகளே பெரும்பாலும் கற்பிக்கின்றர்கள். காரணம் தனியார் கல்விநிலையத்தை நடத்தும் ஒருவனுடைய முக்கிய நோக்கங்களில் ஒன்ருன

| |
|---|
| பரிசு பெறுபவர்<br>அ. குணைப்பிள்ளை<br>11-ம் வட்டாரம்<br>புங்குடுதீவு |

பணத்தைச் சம்பாதிப்பதற்கு அவன் அந்நிலையத்தை எல்லாரும் நாடிப்போகவேண்டும் என்ற நோக்கத்துடனே மிகவும் தேர்ச்சி பெற்ற, திறமையுள்ள ஆசிரியர்களைத் தன் நிலையத்தில் கடமை புரிய அழைத்திருக்கின்முன்.

தனியாக ஒரு பாடத்தை எடுத்துக்கொண்டால் அதில் பல பிரிவு

கள் உண்டு. பாடசாலைகளில் அப்பாடம் பெரும்பாலும் ஒரே ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றது. இன்றும் அரசாங்கப் பாடசாலைகளை எடுத்துக்கொண்டால் ஆசிரியர்களின் மாற்றல் திட்டம் காரணமாகச் சிலவேளைகளில் இரண்டு, மூன்று ஆசிரியர்கள் ஒரே பாடத்தைப் படிப்பிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். ஆனால் இங்கு மாறுகக் குறிக்கப்பட்ட காலங்களில் ஒவ்வொரு பிரிவும் அப்பிரிவுகளில் திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் நன்றாகப் பாடங்களை விளங்கிக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. பரீசைத் தண்ணீரில் பலகாரம் சுட முடியாதுதானே? அம் அவ்வாறே காசு செலவின்றித் திறமையாகக் கல்வியும் பெறமுடியாது தான். இங்கு காசு அறவிடப்படுவதனால் இயக்குநர்களும் தாங்கள் வாங்கும் பணத்திற்குத் தக்கபடி மாணவர்களையும் கல்வியறிவில முன்னேற்ற முயற்சிக்கின்றார்கள். அதுடன் பணம் அறவிடுவது மாணவர்களையும் சிந்திக்கத் தூண்டுகின்றது. இச்சிந்தனையின் பலனாக அவர்கள் தம் பாடங்களில் கூடிய கவனத்தையும் செலுத்துவதற்கு முடிகிறது.

| பாராட்டுப்பெறுபவர்கள் |
|---|
| அலோசியஸ் பெனிசி<br>ஊர்காவற்றுறை |
| எப் சந்திரா மெடோரு கூஞ்ஞு<br>மன்னார் |
| எஸ். ரஞ்சன்<br>மத்துகம |
| இர்பான் தாஹிர்<br>மக்கொனை |
| எஸ். ஜே. அன்சல்மோ<br>இளவாலை |
| எஸ். புஷ்பராணி<br>அந்திரேஸ் முதலியார்<br>பரந்கன் |
| எம் டாறியா அலோசியஸ்<br>கொழும்பு—13 |
| செல்வி எ. ஆர். ஜேசுதாசன்<br>பண்டத்தரிப்பு |
| விக்னு செல்வநாயகம்<br>யாழ்ப்பாணம். |

ஆசினர் பாடசாலைகளில் ஆசிரியர்களின் இடமாற்றம் காரணமாகப் பாடத்திட்டங்கள் ஒழுங்காகக் கற்பித்து முடிக்கப்படுவதில்லை. ஏனெனில் ஒர் ஆசிரியர் தனது பாணியில் கற்பித்துவிட்டு இடையில் நிறுத்திய பாடத்தை இன்னொரு புதிய ஆசிரியர் தனது பாணியில் கற்பிக்கத் தொடங்கும்போது மாணவர்களுக்கு விளங்கிக்கொள்வது கடினமானதாக இருக்கும். இதனால் அவர்களை விளங்க வைப்பதற்கு ஆசிரியர் கூடிய நேரத்தைச் செலவளிக்க வேண்டியிருக்கும். எனவே பாடத்திட்டத்தை முடிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. ஆனால் பொதுப் பரீட்சைகளில் முழுப்பாடத் திட்டங்களினுள்ளும் வினாக்கள் கேட்கப்படுவதனால் விவேகமான மாணவர்கள்கூடத் தமது பாடசாலையில் கற்பிக்கப்படாததன் காரணமாகப் பரீட்சையில் தோல்வியடையும் பரிதாப நிலையைத்

தனியார் கல்விநிலையம் நீக்குகின்றது. ஏனெனில் தமது ஆசிரியர்களினால் கற்பிக்கப்படாத பாடங்கள் அங்கு கற்பிக்கப்படும் நேரங்களில் மாணவர்கள் இங்குசென்று அவற்றைக் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு மாணவனுடைய சூழலும் அவனது கல்வியை விருத்திசெய்வதில் பங்கெடுத்துக்கொள்கின்றது. உதாரணமாக ஒரு பாடசாலையில் கல்விபயிலும் ஒருமாணவனை எடுத்தால் அவன் பலவிதமான ஆசிரியர்களைச் சந்திக்கின்றான். அவர்களில் சிலர் அவனைப் பயமுறுத்திப் படிக்கவைக்கவேண்டும் என்ற விருப்பம் உடையவர்களாகவும் இருப்பார்கள். இதனால் உண்டாகும் பய உணர்ச்சி சிலவேளைகளில் உளவியல் கருத்துப்படி அவனது கல்விவளர்ச்சியைக் கட்டுப்படுத்தக்கூடியதாக அமையும். ஆனால் தனியார் கல்வி நிலையத்தில் இப்படியான பய உணர்ச்சியை அவன் ஒருபோதும் அநுபவிக்கமாட்டான். பெரும்பாலும் ஒரு பாடசாலையில் மற்ற எல்லாப் பிள்ளைகளையும் விடப் பாடங்களைத் திறமையாகச் செய்து தினமும் முதலாவதா மாணவனுக வருகின்றவரின் மனதில் தமக்கு எல்லாம் தெரியும் என்ற கர்வம் உண்டாகுவதனால் அவன் மேலும் முயற்சி செய்து படிக்க முயற்சிப்பதில்லை. இவன் தனியார் கல்வி நிலையங்களில் ஏனைய மாணவர்களுடன் கல்வி பயிலும்போது தன்னைவிடப் புத்திக் கூர்மையுள்ள மாணவர்களைச் சந்திக்கும்போது அவர்களைவிடத் தான் நன்றாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாகி அவன் போட்டிப் படிப்பை ஆரம்பிக்கும் போது மேலும் மேலும் விளக்கமாகத்தனது பாடங்களைப் படித்து இறுதியில் வாழ்வில் சிறந்தவனாகின்றான்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களிலிருந்து தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களிற்கு அளிக்கும் அளப்பரிய சேவையையும் அதனால் மாணவர்கள் அடையும் பலாபலன்களையும் அறியக்கூடியதாகவுள்ளது.

---

இம்முறை கருத்துமோதலில் தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளுக்குரிய பரிசை கொழும்பு கிறிஸ்தவப் பண்பாட்டுப் பேரவையினர் வழங்குகின்றனர்.

நம். 97, அரசாங்க மாடிவீடுகள்,
ரொறிங்ரன் அவன்யூ,
கொழும்பு—5

# தனியார் கல்வி நிலையங்களால் தீமைகளே அதிகம்

தனியார் கல்விநிலையங்களுக்குச் செல்லுதல் இன்று ஒரு நாகரீகமாகவும் கட்டாய தேவை போன்றும் கருதப்பட்டு வருகின்றது. ஆனால் இதனை நடுநிலைமையுடன் ஆராய்வோமாயின் டியூட்டரிகளால் ஏற்படும் நன்மைகளிலும் தீமைகளே அனந்தம் என்பது தெள்ளந்தெளிவாகும்.

பாடசாலை மாணவர்கள் டியூட்டரிகளிலும் கற்பதால் அவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றார்கள். எவ்வாறெனில், அவர்கள் ஒரே விடயத்தை இரு இடங்களிலும் கற்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால் இரு இடங்களிலும் இரு ஆசிரியர்களால் வெவ்வேறு விளக்கமுறைகளாலும் எடுத்துக் காட்டுகளாலும் கல்வியூட்டப்படுகின்றனர். இதனால் அவர்களுக்கு பாடங்களில் தெளிவு ஏற்படுவதற்குப் பதில் பெருங்குழப்பமே விளைகின்றது. இதனால் அவர்கள் போதிய விளக்கமின்றி இரு இடங்களிலும் தாம் கற்றவற்றுள் சில விடயங்களை மூளையில் ஏற்றுகின்றனர். பரீட்சையின்போது வினாவுக்குத் தகுந்த விடையளிக்க முடியாமல் போகின்றது.

அத்துடன், பாடசாலைக்கும் டியூட்டரிக்கும் மாறிமாறிச் செல்வதால் மாணவர்களுக்குத் தாம் கற்றவற்றை திருப்பிப் பார்ப்பதற்கே சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இதனால் அவர்கள் கற்ற விடயங்களை மனதில் இருத்த முடியாது போகின்றது.

பாராட்டுப்பெறுபவர்கள்

கவித்தாம்பிள்ளை
இளவாலை

பி. ஏ. சி. ஆனந்தராஜா
இளவாலை

திஸ்சா செல்வநாயகம்
மிருசுவில்

றமேஷ் வேதநாயகம்
ஊர்காவற்றுறை

ஜசிந்தா செல்வநாயகம்
புத்தளம்

ஞானராஜ் ஞானப்பிரகாசம்
மன்னார்

ச. சத்திய லக்ஷமி
மட்டுநகர்

லா. செபஸ்தியன் குருஸ்
முகமாலை

இ. பிறேமாவதி
யாழ்ப்பாணம்

ப. எ. அன்ரன்
மடுறோட்

சகோதரி லோறு
யாழ்ப்பாணம்

பற்றிமா ஞானப்பிரகாசம்
நாவற்குழி

தனியார் கல்வி நிலையங்கள் தமது வகுப்புக்களை அகாலவேளை

களில் நடத்துவர். இதனால் மாணவர்க்குப் போதிய ஓய்வு இன்மையால் அவர்களது உடனலம் பாதிக்கப்படுகின்றது.

தனியார் கல்வி நிலையங்களில் கற்பவர் அடையும் தீமையைக் கூறும்போது இவ்வாறு கற்காத மாணவர் அடையும் தீமையும் கூறாது இருக்கமுடியாது. அதாவது பாடசாலையில் பாடம்நடந்து கொண்டிருக்கும்போது குறிப்பிட்ட பாடத்தை ஏற்கனவே டியூட்டரிகளில் கற்ற மாணவர்கள் தமது தரத்துக்கேற்ப ஆசிரியர்களிடம் தம் சந்தேகங்களைக் கேட்கின்றனர். அவர்கள் ஆசிரியர் தரும் ஆரம்ப விளக்கம் தமக்குத் தேவையில்லை எனவும் தமக்கு அதுபற்றிப் போதிய விளக்கம் உண்டெனவும் இதன்மூலம் ஆசிரியருக்கு நிரூபிக்கின்றனர், காட்டிக்கொள்கின்றனர். இதனால் ஆசிரியருக்குக் கற்பிப்பதில் இருக்கும் ஆர்வமே போய்விடுகின்றது. டியூட்டரிக்குச் செல்லும் மாணவர்கள் தொகை, செல்லாதோரின் தொகையைவிடக் கூடுதலாக உள்ளதால் ஆசிரியர் அடுத்த புதிய பாடத்துக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகிறார். இதனால்,டியூட்டரிக்குச் செல்லாத வசதியற்ற மாணவரின் கல்வி நிலைமை வெகுவாகக் கீழ் கொண்டு வரப்படுகின்றது. இவ்வாறு டியூட்டரிகளால் டியூட்டரி செல்லாத மாணவரின் கல்வியில் மண்விழுகின்றது.

மேலும், இலாபநோக்கில் இயங்கும் பிரத்தியேக வகுப்பு நடத்துனர்கள் இலாபத்தை அடிப்படை நோக்காகக் கொள்வதால் அவர்களால் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றை எல்லைப்படுத்த முடிவதில்லை.

இலாபநோக்கில் இயங்கும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் தம் மாணவர்மீது ஆசிரியர் என்ற ரீதியில் தமது செல்வாக்கைப் போதியளவு பிரயோகிக்க முடிவதில்லை. இதனால் மாணவர்களுக்கும் ஆசிரியர்க்கும் இடையில் காணப்படும் " தொடர்புப் பிணைப்பு " பாதிக்கப்படுகின்றது. இன்றைய மாணவர் தம் ஆசிரியருக்குக் கீழ்ப்படியாமலும் மரியாதையின்றியும் நடப்பதற்கான முக்கிய காரணங்களுள் இதுவும் ஒன்று என்பது ஏற்கக்கூடிய உண்மை.

> வாழ்வின் அடித்தளம் இளமையில் இருந்துதான் எழுகின்றது. உள்ளும் புறமும் பக்குவப்படவேண்டியது இப்பருவமே. பெற்றோரின் கடமையும், சேவையும் இப்பருவத்தில்தான் வேண்டும்
>
> இளமைப்பருவத்தின் அகராதியில் தோல்வி என்ற சொல்லுக்கு இடமே கிடையாதே.
>
> — இலிட்டர்.

டியூட்டரிகளில் பல ஒழுங்கான நேர அட்டவணைப்படி இயங்குவதில்லை. இதனால் வகுப்புக்குவந்த மாணவர்கள் வீதியோரங்களிலும் மற்றும் பொது இடங்களிலும்

தரிக்க வேண்டியுள்ளது. இந் நிலைமை பல பிரச்சினைகளை ஏற் படுத்தச் சந்தர்ப்பமளிக்கின்றது.

மேலும், மூலைக்கொன்றாக முளைத்திருக்கும் தனியார் கல்வி நிலையங்கள் பலவற்றில் மாணவர் கள் ஒழுக்கத்திலிருந்து விலகி நடவாவண்ணம பாதுகாப்புகள ஏற்படுத்தப்படவில்லை. எடுத்துக் காட்டாகக் கட்டணம் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டு, மாணவரின தராதரம் பற்றிய அறிக்கை, மாணவரின் ஒழுங்கான வரவு ஆகியவைபற்றி டியூட்டரி நிர்வாகிகள் அக்கறை கொள்வ தில்லை.

இவ்வாறு தனியார் கல்வி நிலையங்களால் ஏற்படும் தீமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். எனவே டியூட்டரிகளால் ஏற்படும் தீமைகளே அதிகமாகும்.

பரிசுபெறுபவர்
கருத்து : ஆர். எஸ். செல்வரட்னம்
அல்வாய் வடக்கு,
அல்வாய் (வ. மா.)

& அம்மா, அப்பா, அகோ
கள
அன்பு

# கருத்து மோதல்—அடுத்த போட்டி

இன்றைய காலகட்டத்தில் விலைவாசி உயர்வு நியாயமானதே!
— நியாயமற்றது!

இவற்றிற்குச் சாதகமாகவும், பாதகமாகவும் தோன்றும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

விதிகள் :

* தயவுசெய்து தெளிவாகவும், ஒழுங்காகவும் எழுதி அனுப்புங்கள்.
* ஒருவரே சாதகமாகவும், பாதகமாகவும் வாதங்களை ஒருங்கிணைந்து எழுதக்கூடாது.
* பங்குனித்திங்கள் இருபதாம் (15-1-1980) நாளுக்கு முன் னர் உங்கள் வாதத்தை அனுப்புங்கள்.
* சிறந்த வாதங்களுக்கு இருசார்பிலும் பரிசுகள் உண்டு.
* தகுந்த ஆதாரங்களுடன் சுருக்கமாக ஆனால், தெளிவாக இருபக்கங்களுக்கு மேற்படாமல் முழுத்தாளில் (13" × 4") உங்கள் வாதத்தை (கூடுமானால் ஒரு பக்கத்தில் மட்டும்) வரைந்து அனுப்புங்கள்.
* ஆக்கங்கள் அனைத்தும் கருத்துமோதல், புதியஉலகம், த.பெ. எண் 2, யாழ்ப்பாணம் முகவரிக்கே அனுப்பவேண்டும்.

சிறுகதை

# பொங்குமா பொங்கல்

பிரேமலதா ஆசைப்பிள்ளை

எலும்புகளையே ஊடுருவிப் கிடுகிடுக்க வைக்கும் வண்ணம் அந்த அதிகாலைப் பனிப்புகார் பூமியைக் கவ்விக் கிடந்தது. ஆனால் அந்தப் பனியையும் பொருட்படுத்தாது பகலவன் தன் கடமையைப் புரிய ஆயத்தமாகி விட்டான். அதோ அவன் வருகைக்காக அந்தக் கீழ்வானம் வெளுக்கத் தொடங்கிவிட்டது. விழிக்கத் தொடங்கியது வானம் மட்டுமல்ல, பழுத்த கிழம்போல கட்டிலில் முடங்கிப் போய்க் கிடந்த வேலுப்பிள்ளையர் விழிகளும் தான். ஆனால் அந்த ஆதவனுக்குச் சளைத்தவன் நான் அல்ல என்று போட்டி போட்டுக் கொண்டு எழும்பும்அவர் இப்போ மெல்ல முனகுகின்றார்.

மூன்பு அவர் எழுந்து விட்டதற்கு அறிகுறியாய் அந்தநேரத்தில் சிறு குடிசையாக இருந்த அவர்இல்லம் என்னமாதிரி கலகலக்கும். குளிர்ந்த தண்ணீரை அவர் தலையில்கொட்டும் ஒலியும், "அன்னம், தேத்தண்ணியை கெதியாகக் கொண்டுவா" என்று அழைக்கும் அவர் சிம்மக் குரலும். விடிந்தும் விடியாத அந்தக் காலைப்பொழுதின் மௌனத்தை ஊடுருவும்பொழுது அவர் வீட்டில் உள்ளவரை மட்டுமல்ல, அண்டை அயலவரையும் எழும்ப வைத்துவிடும். கொதிக்க ஆவிபறக்கும் தேத்தண்ணியை அண்ணாக்காக ஊத்திக்கொண்டு தலையில் தலைபாகையுடனும் தோளில் மண்வெட்டியுடனும் கிளம்பி விட்டாரென்டால், ஆதவன் மறைந்து இருண்ட பின்புதான் அவரை வீட்டில் காணமுடியும். அந்த அளவுக்கு மண்ணோடு மண்ணாய் தன்னை ஐக்கியப்படுத்தி, ஆலாய்ப் பறந்து உழைத்தவர் தான் இந்த வேலுப்பிள்ளையர்.

ஆனால் இப்போ? போர்வையைக்கூட விலக்க முடியாத அளவுக்கு, பனிகளை எல்லாம் வென்று உழைப்புக்கண்ட அவர் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. உழைத்து உழைத்து உரமேறிப் போன அவர்உடல் இப்போ உருக்குலைந்து போய்விட்டதா? அல்லது காலம்தான் தன் கோலங்களை அவர் உடலில் பதிக்க முற்பட்டதா? "லோ – பிறசராம்", வயலுக்குள்ள நிண்டு வேலை செய்யக் கூடாதாம். அந்த நினைப்பே அவர் நெஞ்சை நெருஞ்சியாக உறுத்தியது. தனக்கு ஏற்பட்ட அந்த நிலை, தனைத்தானே பார்த்து அனுதாபப் பட்டுக்

கொள்ளும் அந்தநிலை, அதைத அவ ரால் பொறுத்துக் கொள்ள வே முடியவில்லை. விரட்டென எழுந்து கொள்கின்றார். போர்வையை இழுத்துப் போர்த்தபடியே நடக் கின்றார். தன்பாட்டுக்கே அவர் கால்கள் வயலைநோக்கி தள்ளாடி தள்ளாடி நடைபோடுகின்றது!

வரம்பில் ஏறி அவர் நின்ற பொழுது அவரையே மறைத்து விடும் அளவுக்கு ஓங்கி உயர்ந்து நின்ற அந்த நெற்கதிர்கள் அவர் வரவு கண்டு தலைகுனிந்து கட்டி யம் கூறுவதுபோல் காற்றில் அசைந்து உராய்ந்து... "கிர்" என்ற ஓசையை எழுப்பிற்று. பரந்த அந்த பச்சைப் பசேல் என்ற பூரிப்பைப் பார்த்த பொழுது அவர் கண்கள் பரவசத் தால் பரணமித்தன. எவ்வளவு நேரம்தான் தன்னைமறந்து அவர் அப்படி நின்றுகொண்டிருந்தா ரோ!

"என்ன அண்ணே...! அப் படிப் பார்க்கிறியள், ஏதோ என்ர புண்ணியம், உங்களிட்ட வயல் குத்தகைக்கு எடுத்தபடியா இப் படி விளைஞ்சுபோய்க் கிடக்குது. எல்லாம் உங்களின்ர மண்ராசி தான்.." சொல்லியபடியே வந்து கொண்டிருந்த மாஸ்ரர் பரஞ் சோதியின் குரல் அவரை நிஜ உலகிற்கு திருப்பியது.

திறந்துகிடந்த அவன் அகன்ற மார்பும் தலையில் தலைப்பாமையும் கம்பீரமான அந்தத் தோற்றத்தை ஆசைபொங்கப் பார்த்த அவர் கண்கள் கலங்குகின்றன. அதனைக் கண்ட அவன் ""என்ன அண்ணை.. கண் எல்லாம் கலங்குது .. என்ன நடந்தது..." பதறிப்போனவனாய் கேட்கின்றான்.

"ஒண்டுமில்லைத் தம்பி. இது ஆனந்தக்கண்ணீர். உன் தோற் றத்தையும் இந்தவயலின்ர தோற் றத்தையும் பார்த்த பொழுது. ஏதோ என்ர பழைய ஞாபகங் கள் .. ஆனா... இப்ப ஒண்டுக் கும் ஏலாதவனாய்.." அவர் சொல்லும்பொழுதே தொண்டை அடைத்துக் கொள்கிறது. "அதுக்

> நமது தாய்மொழியான தமிழ், உயர் தனிச் செம் மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்துக்குள் உல கப் பொதுமொழியாகி இருக்கும்.
>
> —அறிஞர் அண்ணா.

கென்ன செய்யிறது அண்ணை' எப்பவும் ஒரு மனுசன் ஒருமாதிரி இருந்திட முடியுமே. உங்களால் இயண்டபொழுது உழைச்சியள், இப்போ வயசும் போயிட்டுது. நோயும் பிடிச்சுக் கொண்டது"

"அதுக்கில்லைத்தம்பி, நானும் பெத்தனே ஒரு தறுதலையை... அதை நினைச்சுத்தான் கவலைப் படுறன். உன்னை இந்தக் கோலத் தில் பார்க்கிறபோது நான் அடை கிற ஆனந்தம் இருக்கே... வெளி நாட்டில் யார்திண்ட கோப்பை கழுவுறானோ, அல்லது எந்த வீட் டுக் கக்கூஸ் வாளி தூக்கி

மனைவி : "பஞ்சு வண்ணக் கழுத்துக்குத் தங்க மாலை."

கணவன் : ஐந்தாறு ரூபாக்கு மணிமாலை உன் கழுத்துக்குப் பொருத்தமடி,"

மனைவி : ? ...?... ?

விக்ரர் குமார்,
நாரந்தனை.

ருஞே.." சொல்லும் பொழுதே அவர் வார்த்தைகள் அனலாகக் கொட்டியது.

"சீ ! அப்படிச் சொல்லாதீங்கள் அண்ணே. அது எல்லாம் ஓங்கினைக்க படிக்காத சனம் சொ லுற விசர் கதைகள். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்கிறது போல.., அவனுக்கும் வெளிநாட்டுக்குப்போய் உழைக்க வேண்டுமென்ற ஆசை..." அவன் சொல்லிக் கொண்டே போன பொழுது,

"இதைவிட இந்த நெல் மணிகளை விடப் பெரிய திரவியம் என்ன தம்பி அங்கு விளைஞ்சு கிடக்கு, இதை அவனுல் அங்கு உழைச்சுத்தர முடியுமா ?" ஆவேசமாக அவர் கூறியபொழுது அந்த உணர்ச்சிப் பொங்கலில் அவிந்து போனவனுய் வாய் அடைத்து நின்ருன் பரஞ்சோதி. அந்த மௌனத்தின் பிடியினிலே வேகம் தணிஞ்சு போனவராய் மெல்லக் கனைத்தபடி அவர் கூறுகின்ருர்."

அதுசரி தம்பி, பொங்கல் ஒன்று வருகுது. இந்தமுறை நீ நல்லாப் பொங்கவேணும், ஓ...! உன்ர மனம் குளிர்ந்தது போல அந்தச் சூரியபகவானுக்கும் மனம்குளிர நீ பொங்கிப் படைக்கணும்.

ஓ... !" ஒருஅன்பான கண்டிப்புடன் அவர் கூறிய பொழுது, "ஓம் ! அண்ண இந்தமுறை நல்லாத்தான் பொங்கவேணும். அப்படித்தான் நினைச்சுக்கொண்டு இருக்கிறன். ஏதா ஒவ்வொரு முறையும் ஒப்பாசாரத்துக்காகப் பொங்க வேணுமெண்டு பொங்குவன். ஆனு இந்தமுறை ஏதோ ஒரு உளத் திருப்தியோடு பொங்கலின் தாற்பரியங்களை உணர்ந்த மாதிரி ... பொங்கப் போகிறதாகத் தோணுது"

கண்களில் மகிழ்ச்சி பொங்க அவன் கூறியபொழுது, மெல்லச் சிரித்துக் கொண்டார் வேலுப்பிள்ளையர். "அது உனக்கு மட்டுமில்லைத் தம்பி உண்மையான ஒவ்வொரு உழவனுக்கும் ஏற்படுகிற உளத்திருப்திதான்" சொல்லியபடியே வீடுநோக்கி நடக்கின்ருர்.

நாளை விடிந்தால் பொங்கல் திருவிழா. புதுப்பானை வாங்குவோரும், புத்தமுது படைக்க கின்னலும் செந்நெல் குற்றுவோரும், அந்தக் கிராமமே களை கொட்டுகிறது. ஆனுல், ஊருக்கு முன் கலகலக்கும் வேலுப்பிள்ளையர் வீடு அது இப்போ அமைதியில் உறங்கிப்போய்க் கிடந்தது. வழக்கத்திற்கு மாருக மோட்டு

வளையைப் பார்த்தபடி படுத்துக் கிடக்கும் வேலுப்பிள்ளையரின் மௌனம் அவர் மனைவி அன்னத் துச்குப் புரியவில்லை. அங்கு அமைதியின் ரூபத்தில் புயலொன்று பதுங்குகிறது என்பதைப் புரியாமல் அவள் கேட்கின்றாள். "என்னப்பா பொங்கல் வருகுதுஎண்ட நினைப்பேயில்லாமல், வீட்டுக்குள்ளஇருந்த நெல்லுமூட்டைகளும் தீர்ந்துபோச்சு. ..." அவள் சொல்லி முடிப்பதற்குள்ளேயே... "ஏன் வெளிநாட்டுக்கு அனுப்பினாயே மகன். அவர் அனுப்புவாரே..." ஏளனமாகக் கூறிய பொழுது, "எழும்புங்க...எழும்புங்க... போய்க் கடையிலாவது அரிசி வேண்டிக்கொண்டு வாங்க. எப்பவும் வடிவாகப் பொங்கிற நாங்கள் இந்தமுறை பொங்காவிட்டால் ஊர் உலகம் என்ன சொல்லும்."

அவள் வார்த்தைகளை முடிக்கு முன்பே அவர் ஆத்திரத்துடன் சீறுகின்றார். "என்ன, கடையில வாங்கிக்கொண்டுவந்து பொங்கப் போறியா...? அப்படி ஒரு பொங்கல் இங்கு எழும்பக் கூடாது. என்ர வயலில விளைஞ்ச நெல்லுத் தான் இவ்வளவு காலமும பொங்கினனான். இனி கடையிலபோய் பிச்சை எடுக்கிறமாதிரி வேண்டி ஒப்பாசாரத்துக்கான ஒரு பொங்கல் ...... பொங்கலின் தார்ப்பரியங்களையும் மறந்து ... அது ஒருக்காலும் முடியாது. என்ர வயலில நெல் விளைஞ்சால்தான் இனிப் பொங்கல். ஆவேசத்துடன் கூறிய பொழுது அன்னம் அப்படியே அடங்கிப்போய் விடுகின்றாள்.

ஆதவன் உதயமாகும் அந்த அதிகாலைப் பொழுது — புதுப் பானையில் பொங்கிவழியும் பாலமுது. மெல்லக் கதிரவனை எட்டிப் பார்க்கும் நேரம் பொங்கல் தட்டுவதாக ... பட்டாசுகளின் படபடப்பு எப்டவும் வேலுப்பிள்ளையர் வீட்டிலதான் பொங்கல் முதல் தட்டும். ஆனால் இப்போ பரஞ்சோதி வீட்டில் முதன்முதலாய் படபடவென வெடித்த பட்டாசுச் சத்தம் — அதைக்கேட்டு வைராக்கியத்தில் இறுகிப்போன

---

திராவிடம் என்ற சொல்லு சமஸ்கிருத மொழியில் திராமிட எனத்திரிந்து பின்னா தமிழ் என்று உருப்பெற்றது என்பது கால்டுவெல் ஐயரின் முடிவாகும்.

| சமத்கிருதம் | திராவிடம் |
| --- | --- |
| த்ர — | த |
| மி — | மி |
| ட | ழ (ழ்) |
| (திரமிட) | (தமிழ்) |

'புதிய உலகத்தில் வெளியிடப்படும் தரமான சிறு கதைகளுக்குச் சன்மானம் வழங்குதல்' என்ற தீர்மானத்தின்படி, இவ்விதழில் சன்மானம் பெறும் சிறு கதையாக இக்கதை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

—ஆர்

வேலுப்பிள்ளையரின் இதயமும் மகிழ்ச்சியால் பொங்கிப் பிரகாசித்தது.

ஆனால், அவர் மனைவி அன்னமோ...? அன்றுதான் தபாலில் வந்த அந்தப் போட்டோக்கள், வெளிநாட்டுக்குப் போய் விதம் விதமான கோட்டுக்கள் சூட்டுக்களுடனும், போத்தல்களுடனும் இங்கிலீசுக் காரன்போல நிற்கும் தன் மகனைப் பார்த்த பொழுது அவளுக்கு ஆசையாக இருந்தாலும், இதை அவரிடம் காட்டினால் வீட்டில் வெடித்துச் சிதறாத பட்டாசுக் கடதாசிகளின் குறைக்காக இந்தப் படங்கள் கிழித்து வீசப்பட்டுவிடும் என்பதைப் புரிந்துகொண்டாள். அவருக்குக் காட்டாமலேயே உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு வந்தவள் உள்ளத்திலும்ஒருஇனம்தெரியாத ஒரு நெருடல். ஒரே மகன்ர ஆசையை ஏன் கெடுப்பான்என்று ஒற்றைக்காலிலநின்று அவரையும் எதிர்த்துப் பத்தாயிரங்களாகச் செலவழித்தது எல்லாம் இப்படிப் படங்கள் அனுப்புகிறத்துக்குத் தானோ...?

அவளுக்குள் அந்தவினா எழுந்து கொண்டபொழுது ஏதோ இழக்க முடியாத ஒரு தார்ப்பரியத்தை இழந்துவிட்ட ஏக்க உணர்வாக நெஞ்சம் உறைக்க, அப்படியே படியில் அமர்ந்து விடுகிறாள், என் வீட்டில் இனிப் பொங்குமா பொங்கல்......? அவள்முன் அக்கேள்வி. விடைகாண முடியாமல் விரிந்து செல்கிறது—

முற்றும்.

கதையை எழுதி முடித்துவிட்டு, அதை மீண்டும் ஒருமுறை நோட்டம் விடுகிறேன்; தான் பெற்ற குழந்தையைத் தானே சீவிச் சிங்காரித்து, தானே அழகு பார்ப்பது போன்ற ஒரு தாயின் மன உணர்வு என்னை ஆக்கிரமித்துக் கொள்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் பொங்கல். இக்கதையை இப்போ அனுப்பினால்தான் அது பொங்கல் வெளியீடாக வெளிவரமுடியும் என்ற உள்ளத் துடிப்புடன் தலை நிமிர்கின்றேன். எதிரே என் இளம் மனைவி நின்றுகொண்டிருக்கிறாள், அவள் முகத்தில் தெரிவது என்ன? ''என்னப்பா சும்மா சும்மா எழுதிக்கொட்டிறியளே...! இந்த எழுத்துக்கள் தான் உங்களுக்கு நாளாந்தம் சோறுபோடுகின்றனவா...? என்று

அவள் கரித்துக் கொட்டவில்லை. இங்கிதம் தெரிந்த என் இனிய மனைவி அவள். உள்ளே வெறும் உலை. அது கொதித்து தள்ளும் ஒலி. எனக்கு நிலைமையை உணர்த்தினாலும், அந்த இல்லாமையை அவள் கண்கள் வழியாக அறியும்பொழுது, ஒரு இனம் புரியாத ஒரு சோகம் என்னை வாட்டும்.

பொங்கக்கூடிய வசதிகள் இருந்தும் அதன் பண்பாடுகளை. பொங்கலின் தாற்பரியங்களை காப்பாற்றுவதற்காக பொங்கலே இல்லாமல் ஆக்கிவிட்டேன். இது என்னால் ஆக்கப்பட்ட கதை. ஆனால் என்கதையோ, அப்படிப் பட்ட எழுத்துக்களைப் படைக்கும் எழுத்தாளன் என்பதனால் ஏற்பட்ட ஒரு இழிவான நிலையா? கதையை பத்திரிகைக்கு அனுப்பி விடுவதற்காக நடந்து கொண்டிருக்கிறேன். இக்கதை ஏற்கப் படுமா? அல்லது கதையோடு கதையாய்... இல்லை ஏற்கப்பட வேண்டும், ஏற்கப்பட்டால்தான் அக்கதைக்கான சன்மானம் என்னை வந்து அடையும். அப்படி வந்தால்தான் கொஞ்ச நாட்களுக்கென்றாவது நாளாந்தம் சோறு பொங்க முடியும். என் கதையின் அந்தமுனைப்பு... பொங்குமா, பொங்கல். அது என்னுள்ளும் விடைகாண முடியாமல் விரிந்து செல்கின்றது.

## நானிலம்

நால் + நிலம் = நானிலம், இது உலகைக்குறிக்கும் இந்நானிலமே தமிழர்க்கு வாழ்வளித்த நிலம்.

1. குறிஞ்சி — மைவரை உலகம் — மலையும் மலைசார் இடமும்.
2. முல்லை — காடுறையுலகம் — காடும், காடுசார் இடமும்.
3. மருதம் — தீம்புனல் உலகம் — வயலும் வயல்சார் இடமும்; ஆறும், ஊரும், நகரும்.
4. நெய்தல் — பெருமணல் உலகம் — கடலும், கடல் சார் உலகும்.

இந்நான்கு திணைகளுக்கும் உரிய திராவிடக்கடவுள்கள் அல்லது தலைவர்கள்: குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்கு மாயோன், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன்.

ஆதாரம்: "தமிழர் சமுதாயம்"
கவிஞர் தமிழ் ஒளி

கண்டதைக் கண்டபடி - அதன் வழி
எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்



# அமெரிக்க அனுபவங்கள்

**புதிய உலக வாசக அன்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்கூறி எழுதுகிறேன்.**

சென்ற இதழில் எனது பகுதியிலேயே எனது விளம்பரத்தைப் படித்திருப்பீர்கள் (ஆசிரியர்களுக்கு நன்றி). "கண்டபடி ஏதோ கிறுக்கப்போகிறார்" என்று சில வாசக அன்பர்கள் உணர்ந்ததை அறிந்தேன். 'கண்டபடி' என்ற சொல்லில், கண்டபடி அர்த்தங் கொண்டதினால் எழுந்த எண்ணங்கள் அவை.

ஒன்பது திங்கள்களுக்கு முன்னர், கட்டுநாயக்காவில் ஆரம்பித்த எனது பயணத்தில் இருந்து ஆரம்பிக்கத்தான் எண்ணியிருந்தேன். ஆனால், உலக அரங்கில் நடைபெறும் சிலமுக்கிய சம்பவங்களும், அதனால் பாதிக்கப்படும அமெரிக்க மக்களை அவருடம் சந்திக்கும்பொழுது ஏற்படும் அனுபவங்களையும், எழும் எண்ணங்களையும் மறந்து, ஒன்பது மாதங்களுக்கு முன்னர் நடந்தவற்றை எழுத எனதுமனம் விரும்பவில்லை.

சுடச்சுடப்பெறும் அனுபவங்களை, புதிய உலக வாசக அன்பர்களுடன் சுடச்சுடப் பகிர்ந்துகொண்டு, ஆறிய நேரங்களில் ஆறிய அனுபவங்களைப் (வாய்ப்பும் வசதியும் வழிவிட்டால்) பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணினேன்.

அனுபவங்கள் அடிமேல் அடி வைத்துக் கோட்டைகளாக எழுகின்றன. அவற்றினூடாக சிந்தனைகளும் எண்ணங்களும் அலைமேல் அலையாக எழுந்து மோதுகின்றன. அத்தனையையும எனது வாசக அன்பர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற தமிழ்ப் பண்பில் எழுந்த ("நான் பெற்ற இன்பம், பெறுக இவ் வையகம்") ஆசை துடிக்கிறது. ஆனால், காலமெல்லாம் வேண்டும், அவற்றைக் கடிதமாக வரைய. கல்லூரிக் கல்வி காலத்தைக் களவெடுக்கிறது. காலந்தாழ்த்திப் (இரு திங்களகளுக்கு ஒன்று) 'புதிய உலகம்' வெளிவருகின்றது எப்படி வரைவேன்?

ஆகவே, கட்டுரை எழுதும் காலம் வரும்பொழுது ஏற்படும் அனுபவங்களையும், எண்ணங்களையுமே எழுத்தில் வடிக்க முயல்வேன்.

இந்த முகற் கட்டுரையில் 'பனி' என்ற ஒருசொல்லைப் பயன்படுத்தியுள்ளேன். Snow என்ற ஆங்கிலச் சொல்லையே, தமிழில் 'பனி'யாக்கியுள்ளேன். வேறு சொல்லைத் தெரியாத அறியாமை காரணம், மன்னித்துக் கொள்ளுங்கள். (தெரிந்தவர்கள், தெரியப்படுத்தினால் நன்றியுடையவனாக இருப்பேன்). இங்கு ஒரு சில பெயர் — Mr. Snow தயவுசெய்து எனது மொழிபெயர்ப்பையே ஏற்றுக்கொண்டு, அவர்களை — திரு. பனி என்று அழைத்து விடாதீர்கள்! எங்கள் நாட்டில், சில வேளைகளில் சிலரைச் சில காரணங்களுக்காகப் 'பனியர்' என்று அழைப்பதை எண்ணிக்கொண்டேன்! அதனாலேயே இந்த எச்சரிக்கையை விடுக்க நினைச்சேன்.

இக்துடன், எனது அறிமுக உரையைநிறுத்திக்கொண்டு, அன்பர்களே, நண்பர்களே — வாருங்கள், எனது அமெரிக்க அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வாருங்கள்; அதன் வழி எழுந்த எனது எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ள வாருங்கள்; உங்கள் வரவேற்பிலும் — விமர்சனங்களிலுந்தான் இக்கட்டுரைத்தொடர் வளரும். அதனால், உங்கள் விமர்சனங்கள் சாதகமாக அமைய வேண்டுமென்பதற்கில்லை. "சமநிலை நின்று விமர்சனம் செய்யும் பொழுதுதான் ஓர் எழுத்தாளன் வளர்கின்றான்," என்ற கூற்றில் எனக்கு முழுமையான நம்பிக்கை உண்டு என்று கூறி, அழைப்பு விடுத்து வழிவிடுகிறேன்.

## சிந்தனையூட்டும் இயற்கை எழில்

எங்கும் ஒரே வெண்மைமயம். இலைகள் முற்றும் இழந்த வெறும் கொப்புகள் கொண்ட கறுத்த நெட்டை மரங்கள் ஆங்காங்கே வாழ்விழந்த கோலம். கூரைகள் கட்டடங்கள் எல்லாம் வானத்தில் முளைத்த வீடுகள் போலத் தோன்றும் காட்சி. சைப்பிறஸ் மரங்கள் மட்டும் பனியில் மூழ்கினாலும் ஆங்காங்கே கனத்த பசுமையைக் காட்டி "நான் என்றும் பதினாறு" என்று பெருமையுடன் தனது இளமையைக் காட்டத் துடிக்கும் பார்வை.

வானத்தில் இருந்து சின்னஞ்சிறு பஞ்சுகள்போல பனி கொட்டுண்டு பூமியை நிறைத்துக் கொண்டே இருக்கின்றது. கண்ணாடி போட்ட ஜன்னலின் ஊடாகப் பார்க்கின்றேன். அழகான காட்சி.

கடற்கரையில் நின்று, மாறி மாறி அடிக்கு எழுந்துவரும் அலைகளைப் பார்த்துக்கொண்டே நிற்கலாம் கடற்கரைக்காற்றும் அலைகளுடன் சேர்ந்துவிட்டால், வெறுமையான கடற்கரையில் கற்பனைகள் சிந்தனைகள் எழுவது இயல்பு. இது அனுபவ அறிவு. அதே போன்று, மலைச்சாரலில் நின்றுகொண்டு பசுமையான உயர்வு

களையும் தாழ்வுகளையும் பார்க்கும் பொழுது கற்பனைகள், சிந்தனைகள் உதிப்பது வழமை. இதுவும் ஓரளவு அனுபவ அறிவு.

வானத்தில் இருந்து கொட்டுப்படும் இப்பனித் திரள்களைப் (snow) பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதும், சிந்தனைகள்-கற்பனைகள் உருவாகின்றன. இது இயற்கையின் கொடையோ, அன்றேல் இறைவனின் அருளோ! நன்றி. அனுபவிப்போம், இது அமெரிக்க அனுபவம்!

வெளியில் சென்று, மென்மையாக விழுந்துகொண்டிருக்கும் பனியை கையிலேந்திப் பார்க்கின்றேன். தொட்டதும் கரைந்து கசிந்து விடுகிறது அவ்வளவு மென்மை. ஆனால், சிறுகச்சிறுகச் சேர்ந்து மலையாக எழுந்து விட்டால், கட்டியாகி இறுகிவிடும். தரைபூராக நிறைந்துவிட்டால், பாலிலும் வெண்மையான ஒரு பெரிய நீண்ட வெள்ளைக் கம்பளத்தை விரித்துவிட்ட அழகு நிறை வெண்மைக் கோலம்.

புதிதாக விழுந்தபனி அழகாகவும், மென்மையான பஞ்சு மெத்தையாகவும் தோன்றும். சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். விழுந்து விளையாட, அளைந்து குழைத்து விளையாடி, உருண்டையாக ஒருவர்மீது ஒருவர் எறிந்து விளையாட, அள்ளி வாயினுள் போட்டு மென்று விழுங்க அவர்களுக்குப் பனிக்காலம் ஒரு புதுமையான விளையாட்டுக் காலம்.

நடைபாதைகளிலும், தெருக்களிலும் பதிந்துவிட்ட பனித்திரள்களை காலைதோறும் அகற்றுவார்கள், இதற்கென இயந்திரங்கள் உண்டு. அதேவேளை தெருக்களில் உப்புப் போட்டு விடுவார்கள், பனியின் எதிரி உப்பு! ஆயினும், ஓடும் வாகனங்களினால் அதிகமான தெருக்கள் ஒரேசேறாக இருக்கும். நமதுநாட்டுச் சேற்றைப்போல அன்று. வெள்ளை மணலில் நீர் ஊற்றிக் குழைத்து விட்டால் எப்படியிருக்குமோ, அதே கோலந்தான். பனிக்காலத்தினால் வாகனங்களுக்குப் பலத்த சேதம் ஏற்படுகின்றது! பனிக்காலம் முடிந்ததும் கறள்பிடிக்கத் தொடங்கிவிடும். அழகான வாகனங்கள், அசிங்கமாகத் தோன்றுகின்றன.

## காலங்கள் மாறக் கோலங்களும் மாறுகின்றன

நெட்டை மனிதர்களையும் குனியவைக்கும் குளிர். ஆனால், இக்காலத்துக்கென்று உடைவகைகள் ஆயிரக்கணக்கான கோலங்களில், வண்ணங்களில் விற்பனையாகின்றன. முகம்மட்டும் (சிலர் கண்கள் மட்டும்) தெரிய உடுத்துவார்கள். தொடைகாட்டும் மினிக் கோலமும், இடைகாட்டும் அரைக்கோலமும் 'லோ கட்' நெக்கும்' மாயமாக மறைந்து விட்டது, பனிக்காலத்தில். சந்திரனில் சஞ்சரித்தவர்களைப் பார்த்திருப்பீர்கள், சிலர் அவ்வண்ணமே மிகத் தடிப்பான உடை

களை உடுத்துவார்கள்; அவ்வண்ணமே நடப்பார்கள்.

இப்படிப்பட்ட உடைகளுடன் மிக அழகாகத் தோன்றுபவர்கள் குழந்தைகளும் சிறுவர்களுமே. அவர்களைப் பார்க்கும் பொழுதெல்லாம், என்னையறியாமலேயே எனக்குள் நகைத்துக் கொள்வேன்.

நானும் இப்படி உடுத்திக் கல்லூரிசெல்வது எனக்கே நகைப்பாகவும், ஒருவித புதுமையான அனுபவமுமாக இருக்கின்றது. ஆறுவருடங்களுக்கு முன்னர், பிரான்சில் உள்ள லியோன் (lyon) நகரில் குளிர்காலத்தில் வாழ்ந்த அனுபவம் ஞாபகம் வருகின்றது. அப்பொழுது 'பஸ்'சுக்குக் காத்திருந்து கல்லூரி செல்லவேண்டிய அவசியமிருக்கவில்லை. அத்துடன் இப்படிக் குளிரோ|பனியோ அங்கு இருக்கவும் இல்லை.

இக்குளிரில், இப்பனியில் இரண்டு 'பஸ்' எடுத்துக் கல்லூரி செல்ல வேண்டும். 'பஸ்'சுக்குக் காத்திருக்கும் வேளை. தெருவில் பலரைப் பார்க்கின்றோம்.

## குளிரோ, பனியோ சுறுசுறுப்புக் குறையாது

குளிர் என்ற காரணத்தினாலோ, அல்லது, பனியென்ற சாட்டினாலோ இங்கு இவர்கள் வீடுகளில் இருந்துவிடுவதில்லை. சுறுசுறுப்பாகவே அன்றாட வேலைகளில் ஈடுபடுகிறார்கள். அனைத்து அலுவலகங்களும், கல்லூரிகள் பாடசாலைகள், நிறுவனங்கள் சர்வசாதாரணமாக இயங்குகின்றன.

ஆரம்பப் பாடசாலைச் சிறுவர்கள்கூட சுறுசுறுப்பாகப் பாடசாலை செல்லும் காட்சி இவர்கள் எப்படி வளர்கிறார்கள் என்பதற்குச் சான்று.

இவ்வளவு சுறுசுறுப்பாக இயங்கிவரும் இம்மனிதர்களின் உள்ளங்களில் இன்று ஓர் எண்ணம் பொதுவாக ஊடுருவுகின்றது. அந்த எண்ணம் சுமையானது. கவலையானது. சிந்தனைக்குரியது.

## ஜனாதிபதியின் பேருரையில் போருரை இழையோடுகிறது

தைத்திங்கள் 23-ம் நாள் (23-1-80) மாலை இந்நாட்டுஜனாதிபதி என்றுமில்லாவகையில் இந்நாட்டு ஐக்கிய ஆளுநர் பேரவை முன் ஒரு பேருரை நிகழ்த்தினார். இவ்வுரை அலைத்துத் தொலைக்காட்சி நிலையங்களாலும், வானொலி நிலையங்களாலும் நேர்முக அஞ்சல் செய்யப்பட்டது.

பொதுவாக மென்மையாகப் பேசும், 'அன்பு சமாதானம்' என்று எடுத்துரைக்கும் ஜனாதிபதி போர்பற்றிப் பேசினார். "ரஷ்ஷியா இரானில் பலவந்தமாக நுழைந்தால், அமெரிக்கா ஆயுதத்துடன் தலையிடும்" என்பது காட்டரின் சொற்களின் நேரடி மொழி பெயர்ப்பு, அதற்கு முன்னோடியாக அவர் ஓர் அழைப்பையும் விடுத்தார்.

### "பீக்கிங் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட யாழ் முதல்வரின் தமிழ்ப் பேச்சு

இலங்கைத்தீவில், தமிழ்த் தேசிய இனத்தின் மரபுவழித் தாயகமான தமிழ் ஈழத்தின் பெரு நகரமாகிய யாழ்ப்பாண மாநகர சபையின் சார்பில், 'பீக்கிங் வானொலியில்' பேசுவதற்குக் கிடைத்த இந்த நல்ல வாய்ப்புக்காகச் சீனக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சீன மக்களுக்கும், பீக்கிங் வானொலி நிலைய நிர்வாகிகளுக்கும் எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சீனாவுக்கும், தமிழ் மக்களுக்கும் வரலாறு தொடங்கிய காலம் முதற்கொண்டே சுமுகமான பண்பாட்டு உறவு நிலவி வந்திருக்கின்றது. இதனைப் பழைய தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சீனாவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களும் அதனையே உறுதிப்படுத்துகின்றன.

கொழும்பு மாநகர முதல்வர் திரு. சிறிசேன குரேயின் தலைமையின் கீழ் நாங்கள் சீனாவின் பெருஞ் சுவரைப் பார்க்கச் சென்றிருந்தோம். சீன மக்கள் அங்கும் எம்மை வரவேற்றார்கள். சீனப் பெருஞ்சுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டது. அது மூவாயிரம் மைல் நீளமுடையதென யான் அறிகிறேன். சீன மக்களின் பண்பாட்டுத் தனித்துவத்தைக் காலாதி காலமாக இப் பெருஞ்சுவர் பாதுகாத்து வந்துள்ளது. ஒரு இனம் சுதந்திரத்துடன் வாழவேண்டுமாகில், அதன் எல்லைகள் பாதுகாக்கப்படவேண்டியது அவசியமாகும். இலங்கையில் வதியும் தமிழ்பேசும் மக்களும் ஒரு சுதந்திர இனமாக வாழவேண்டுமென்று விரும்புகிறார்கள். இலங்கைத் தீவில் வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்ப் பேசும் மக்கள் தமது மரபுவழித் தாயகத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டிருக்கிறார்கள்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய இனத்திற்கும் சீனாவுக்கும் இடையே பழைய நட்புறவு மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

தருபவர்: இரவியம்

பதினெட்டு வயதும், அதற்கு மேற்பட்டோரும் 'ஆணைச் சமவயதுக்குட்பட்டோர்) போருக்குச் செல்ல கையொமத்தி ஆயத்தமாக இருக்கச் சொன்னர். இந்த அழைப்பைப் பேரவையின் பிரேரணையாக்கிச் சட்டமாக்க இந்த நாட்டு ஜனாதிபதிக்கு உரிமை உண்டு.

போரை இந்நாட்டு மக்கள் வெறுக்கிறார்கள். "எங்களைப் போல எந்த நாடும் இவ்வளவு போர்களில் ஈடுபட்டதில்லை.", அண்மையில் ஒரு பெரியவர் சொன்னார். "இரண்டு உலகயுத்தங்களின் அனுபவம், அத்துடன் வியட்நாம் அனுபவம் இன்னமும் பொருஞ்சுமையாக மனதில் உண்டு. அந்த அனுபவங்களுக்குப் பின்னரும், போருக்கு யாரும் செல்வார்களா?" இன்னும் சிலர் இப்படிச் சொன்னார்கள்.

வியட்நாம் போர் இந்நாட்டு மக்களிடையே பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. "மற்றநாட்டுப் பிரச்சனைகளில் நாமேன் கலையிடுவான்?" என்பது பொதுமக்களின் கேள்வி. "யாராவது எப்படியாவது வாழட்டும். நாம் நமது வாழ்க்கையை வாழ்வோம்" என்பது சாதாரண மக்களின் போக்கு. உலக அரசியலைப் புரியாத மக்கள் இவர்கள் இல்லை, புரியவேண்டிய அவசியம் இல்லையென்று எண்ணுபவர்கள், இவர்கள்.

"வியட்நாம் போருக்குச் செல்லமாட்டோம்" என்று இளைஞரிடையே ஓர்இயக்கமேஉருவாகி

யிருந்தது. அந்தப்போர் இந் நாட்டு மக்களிடையே இருந்த அசைக்கமுடியாத நாட்டுப்பற்றை யும்' "நாம் அமெரிக்கர்கள்" என்ற ஒற்றுமையும் ஓரளவு குழப்பிவிட்டது.

"வியட்நாம் போரை நிறுத் துவேன்" என்று நிக்ஷன் ஆணித் தரமாகக் கூறியதினாலேயே, அவ ரை இரண்டாம் முறையும் வெள்ளை மாளிகைக்கு (White House) அனுப்பிவைத்தனர், அத் துடன், "இனிப் போர்கள் இல்லை, ஆயுத உற்பத்தி வெகுவா கக் குறைக்கப்பட வேண்டும்" என்றொரு எண்ணம் இந்த மக்க ளுடைய வித்துான்றி வளர்ந்து விட்டது. பத்திரிகைகள், சஞ்சி கைகள், வானொலிகள், தொலைக் காட்சிகள் இந்த எண்ணத்தை மேலும் வளர்த்து விட்டன.

அநேக வெளிநாட்டுப் பிரச் சினைகளுக்கு (அமெரிக்கர்கள்) சம் பந்தப்பட்ட பிரச்சினைகள்) தங் கள் தலைவர்கள் காரணமாகிஇருக் கிறார்கள் என்ற உண்மை இவர்க ளுக்குப் படிப்படியாகத் தெரிய வந்தன. குறிப்பாகச் சில அண் மைக்காலப் பிரச்சினைகள் நிக்ஷ னாலும், கிஸ்சிங்ராலும் உருவா கின என்ற உண்மையைப் பத்திரி திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக் காட்சிப் பேட்டிகள் தெளிவாக்கின. இப்பொழுது இவர்கள் அந்த இரு தலைவர்களை யும் மனதார வெறுக்கிறார்கள். "இரானில் பணயம் வைக்கப்பட் டிருக்கும் அமெரிக்கர்களை விடுதலை செய்ய, நிக்ஷனையும் கிஸ்சிங்கரை யும் பணயக் கைதிகளாக அனுப்பி னால் என்ன?" என்று கேட்கும் அமெரிக்கர்களை நான் அடிக்கடி சந்தித்துள்ளேன்.

**உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம்**

உண்மைகள் தெளிவாகும் பொழுது, அவற்றை ஏற்றுக் கொள்ளும பக்குவம் பெரும்பான் மையான (எல்லாருமல்ல!) இம் மக்களிடம் இருப்பதை உண்மை யிலேயே மெச்சவேண்டும். அதே போன்று, மக்கள் அறிய வேண் டிய உண்மைகளை அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்து வைக்கும அமெரிக்க பத்திரிகைகளையும் சஞ் சிகைகளையும், வானொலி நிகழ்ச்சி களையும், தொலைக்காட்சிப் பேட் டிகளையும், சஞ்சிகை நிகழ்ச்சிகளை யும் பாராட்டி வரவேற்க வேண் டும் !

"உண்மை உங்களை விடு விக்கும்" என்ற இறிஸ்துவின் பொன்மொழி ஞாபகம் வருகின் றது. அதன் அர்த்தத்தை ஓரளவு அனுபவிக்கக் கூடியதாக இருக் கிறது,

"கடந்தகாலத்தில் இரானுக் குச் செய்த அநிதிகளை அமெரிக்கா ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று தலைப்புக்கொடுத்து ஒரு கத்தோலிக்க பத்திரிகை அண்மை யில் கட்டுரையொன்றைப் பிர சுரித்தது. எவ்வளவு துணிவுகர மான செயல்! ஆனால், நேர்மை யான செயல்.

**துணிவு உண்டா?**

இவ்வேளை எனது நாட்டை யிட்டு எண்ணுகிறேன், எண்ணிய படியே எழுதியபடியே எழுதிவிடு கிறேன்.

1958 லும், 1977 லும் ஓர் இனத்தின் இரத்தத்தை இன்னு மோர் இனம் குடித்தது. கொடு மையான கொலைகளைச் செய்தது. இதில் அரசியல் தலைவர்களுக்குப் பெரும் பங்குண்டு. இன்று இத் தலைவர்கள் அதை ஏற்றுக்கொள் வார்களா? அவ்வளவு தூரம் அவர்கள் வளர்ந்திருக்கிறார்களா?

எமது தலைவர்கள் (தமிழ்த் தலைவர்கள் உட்பட) செய்த கொ டுமைகளை, அநீதிகளை எமது பத் திரிகைகள், சஞ்சிகைகள், வா னொலி, திரைப்படங்கள் உள்ள தை உள்ளபடி சொல்லுமா? அதீதத் துணிவும் நேர்மையும் இலட்சியத் தூய்மையும் எமது பத்திரிகையாளர்களுக்கும், தொ டர்பியலாளர்களுக்கும் (communicators) உண்டா?

'புதிய உலகமே' நீ செய்வா யா? அப்படி நீ துணிந்து உனது பணியைச்செய்து பிரச்சனைப்படும் பொழுது, உனது வாசகர்கள் உனக்காக வாதிட வருவார்களா? சொல்லுங்கள், வாசக அன்பர் களே, வருவீர்களா? அந்தத் துணி விலும் தூய்மையிலும் நேர்மையி லும் வளர்கிறீர்களா?

பறந்து வரட்டும் உங்கள் பதில்கள்! சாதகமானாலும் சரி. பாதகமானாலும் சரி, எழுதுங்கள் உங்கள் எண்ணத்தை அறிய வேண்டும்.

---

**அடுத்த இதழில்**

## "மகா பராக்கிரமபாகு தமிழனா?"

(வரலாற்று ஆராய்ச்சிக் கட்டுரை)

ஆங்கிலமூலம்:

கலாநிதி P. V. D. பெர்னாண்டோ

தமிழில்:

திருமதி C. M. மரியாம்பிள்ளை, B. A.

---

# புதுமைப் பதில்

ஜி. பீற்றர்
கொழும்பு—15

கடன் வாங்கிய பணத்தில், பிஸ்கட், இனிப்பு வகைகளையும் தேவைக்கதிகமாக மோட்டார் வாகனங்களையும் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப் பாதிக்கும் அளவிற்கு ஏனைய பொருட்களையும் இறக்குமதி செய்யும் இன்றைய அரசாங்கத்தைப் பற்றி உங்கள் க்ருத்தென்ன?

அத்திவாரம் உக்கிவிட்ட நிலையில் அதன் மேல் அடுக்கு மாளிகை கட்டிக் கொண்டிருக்கிறது அரசு ஏகப்பட்ட வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களை நாளாந்தம் அறிகிறோம். அரசாங்கமும் பெரியதொரு அரசியல் விபத்தைச் சந்திக்கப்போகிறது.

* * *

எஸ். புஸ்பராணி அந்திரேஸ் முதலியார்
பரந்தன்

இருளில் நின்று உலகைப் பார்ப்பவனுக்கும் ஒளியில் நின்று உலகைப் பார்ப்பவனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை.

சினிமா கொட்டகைக்குள் நிற் இருப்பவனுக்கும், வெளியுலகில் பவனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைதான் கொட்கைக்குள் இருப்பவன் இருளில் இருந்து கற்பனை உலகைக் காணுகின்ருன். வெளியில் நிற்பவன் நிஜ உலகை காணுகின்ருன். இருளில் நின்று பார்க்கும் உலகம் ஒரு குறிப்பிட்ட மணித்தியாலம் (காலம்) மட்டும் தான். ஆனால் வெளியுலகம் வாழ் நாள் முழுவதும் காணப்போவது.

* * *

எஸ். குலேந்திரன்

கத்தோலிக்கத்திருச்சபையின் ''பரிசுத்த ஆவியின் அருங்கொடை இயக்கம்.'' இது பற்றி தங்கள் அபிப்பிராயம்......?

ஆவியின் அருட்கனியை வேறு ஒரு தோட்டத்தில் பிடுங்கலாம் என நினைத்துப்போக விருக்கும் கத்தோலிக்கர் அதை அவர்கள் தமது தோட்டத்திலேயே உருவாக்கிவிட்ட கனி மரம்.

* * *

பீ. ஜெனி
நாரந்தனை

தேனீ தேன் கூட்டை மொய்ப்பதுபோல் தினமும் ஆண்கள் பெண்கள் என்னும் தேன்கூட்டை மொய்க்கிருர்களே! இப்படியான ஆண்கள் பற்றி உங்கள் கருத்து என்ன ?

சே..! எமது பெண்களையே அவமானப்படுத்துகிறீர்களே! பல ஈக்கள் மொய்த்தபோதும் எல்லாரையும் ஏற்றுக் கொள்ளும் தேன் கூட்டைப் போலவா எமது பெண்கள் இருக்கிறார்கள்?

*  *  *

ஒரு கள்வனைச் சமுதாயமசனது ஒதுக்கிவைக்கும்போது அவன் விரக்தி அடைந்து மேலும் மேலும் களவு செய்கின்றான். அவனை அன்பு செய்து சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளும்போது அவன் தனது தொழிலைக் கைவிட மறுக்கின்றான். இப்படிப்பட்ட ஒருவனைத் திருத்துவதற்கு புதிய உலகம் கூறும் அறிவுரை என்ன?

சாம, பேத, தான தண்டம் இந்த நான்கில் ஏதாவது ஒன்றுக்கு அடங்கியே ஆகவேண்டும். முயன்று பாருங்கள்.

*  *  *

வஞ்சியூர் ஏ. எஸ். பிள்ளை

தமிழனாக இருந்தும் வேறுமொழியைப் பேசி சந்தர்ப்பத்துக் கேற்ப பச்சோந்திகளாக மாறுபவர்களைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

தாய்ப்பாலைவிட மாப்பாலே இப்பெழுது முக்கியமாகிவிட்டதால் ஏற்பட்ட வினை என்று நினைக்கிறேன். ஏனென்றால் பாலூட்டும்போதே பண்புகளும் ஊட்டப்படுகின்றன என்பதை நம்புபவர்கள் நாமல்லவா?

*  *  *

அன்ரனி மங்களராஜா

புங்குடுதீவு

சந்திரன், பூமி, சூரியன் இம் மூன்றும் ஓர் ரேகைக் கோட்டில் வரும்போது கிரகணம் ஏற்படுகிறது என்று விஞ்ஞான ஆசிரியர் சொல்லுகிறார். ஆனால் தமிழ் ஆசிரியரோ சந்திரனைப் பாம்பு விழுங்குதல் என்கிறார். மாணவர்கள் எதை நம்புவது? விஞ்ஞான உண்மையையா? புராணத்துப் புளுகையா?

எது உண்மை, எது புளுகு என்று நீங்களே தீர்மானித்துக் கூறியபின் நம்பவேண்டியது எது என்பதை நான் வேறுகூறவேண்டுமா? ஆனால் தமிழ் ஆசிரியன் உங்களை நம்பும்படி கூறவில்லையே எமது முன்னவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்களையும், அவர்களது கற்பனைத்திறனையுமே காட்டுகிறது. கற்பனைகள் சுவைப்பதற்கே ஒழிய நம்புவதற்கல்ல!

*  *  *

அ. மரிய செல்வநாயகம்

நெடுந்தீவு

நாம் நல்லவற்றைச் செய்யும்போதும் சமுதாயம் அந்த செயல்களைப் பாராது ஒதுக்கிவைப்பது ஏன்?

நல்லதுக்குக் கிடைக்கும் நியதி அதுதான். கொடியவன் ஒருவனைக் கண்டால் எல்லாரும் அவன் மீது உள்ள பயத்தின் காரணத்தால் அரச மரியாதையே செய்வார்கள். ஆனால், அவன் இறந்தபின்னால் பிணத்தின் மீது காறி உமிழத் தயங்கமாட்டார்கள். ஆனால் நல்லது செய்பவன் பலராலும் ஒதுக்கப்பட்டாலும் அவன் சமாதியின் மீது கண்ணீர் மாலை சொரிவார்கள். இவற்றுள் எதை விரும்புகிறீர்கள்? எனவே, நல்லது செய்வோர் ஒதுக்கப்படுவதையிட்டு வேதனைப்படவேண்டியதில்லை.

*  *  *

(தொடர்ச்சி 61-ம் பக்கம்)

# உங்கள் பார்வை

மேரிஸ்செலா
பெரியவிளான்

புதிய உலக மலரைப் புரட்டினேன். அங்கே ஊசி முனையில் ஒட்டகம் நுழைந்தாலும் என்னும் சிறுகதை என் மனதைக் கவர்ந்தன. இன்று நடக்கும் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது புதிய உலகத்திற்கு எனது பாராட்டுக்கள்.

எஸ். கொன்சி
மிருசுவில்

இன, மத பேதமின்றி வெளிவரும் புதிய உலகத்திற்கு எனது பாராட்டுக்கள் மலர்ந்திருக்கும் புத்தாண்டில் புது உலகம்காணத் துடிக்கும் அனைவர்க்கும் புதிய உலகம் சஞ்சிகை புதிய பாதை காட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

விக்ரர் குமார்
நாரந்தனை

தங்களது கார்த்திகை — மார்கழி ''புதிய உலக'' மலர் ஒளி மலராக வெளிவந்தமை கண்டு மகிழ்ந்தேன். அதில் இடம்பெற்ற அம்சங்கள் யாவும் யாவர்க்கும் பயனுள்ளனவாயிருந்தன.

அடுத்து "எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்" பகுதியை ஆசிரியர் செல்வம் எழுதுவது நன்றாயிருக்கிறது. அவர் தொடர்ந்து எழுதுவாராக, இறைவன் அவரது படிப்பை ஆசீர்வதிப்பாராக

செல்வதி அத்தோனிமுத்து
ஊர்காவற்றுறை

இந்த ஆண்டு குடும்பநல ஆண்டாகத் திகழ்வதினால் புதிய உலகத்திலே குடும்ப நலனைப்பற்றிய சிறப்பான அம்சங்கள் பல வெளியாகி அதனால் பல குடும்பங்கள் பயன் அடைய வழிவகுக்குமென நம்புகிறேன்.

என், குலேந்திரன்
யாழ்ப்பாணம்

கார்த்திகை, மார்கழி இதழ் காலம் கடந்தமை பல கேள்விகளை உருவாக்கியது! தபால் ஊழியர்களைக் கூடத் தப்பாக நினைக்கும் அளவிற்குச் செயற்பட்டுவிட்டது. இப் புதியஉலகம் தொடர்ந்து வாய்மை தவறாது செயல்படும் என்று எண்ணுகின்றேன்.

தமிழ்ச் செல்வி வேதநாயகம்
ஊர்காவற்றுறை

உங்களிடம் ஒருவேண்டுகோள். அதாவது நீங்கள் தீண்டாமை பற்றியும் சாதி, மதபேதம் பற்றியும் எங்களுக்கு எடுத்துரைக்கும் இவ்வேளையில் எங்கள் தமிழ்த் தாய்நாட்டில் நிலவும் சீதனப் பேயை விரட்டுவதற்கு, அதன் கொடுமைகளைப்பற்றிச் சிறிதளவாவது சிந்திப்பதற்கு, எல்லோரையும் கேட்பீர்களா? உங்கள் கருத்துமோதலில் சீதனத்திற்கும் ஒருதரம் இடம்கொடுப்பீர்களா?

யஸ்ரின் ஜெயரவி
ஏழாலை தெற்கு, ஏழாலை

அன்புள்ள புதிய உலக ஆசிரியருக்கு வணக்கம் பல! ஒளிமலர் தாமதித்து வந்தமை மிக்வும் மன வருத்தத்திற்குரியது.

ச. சக்தி, மட்டுநகர்

புதிய உலகமே உங்கள் புதிதும் புதிருமான சுவைகளை மென்மேலும் தந்து வாசகர்களாகிய எங்களுக்கு மகிழ்ச்சி தருவதுடன் 'கரவையூர்ச் செல்வம்' அவர்களின் அமெரிக்கா அனுபவத்தையும் மற்றும் புத்தம்புதிய கருத்துக்களையும் எதிர்பார்கிறேன்.

அ. மன்னூர் மணி
வஞ்சியன்குளம்

கார்த்திகை-மார்கழிமாத புதிய உலகத்திலே, இறை மனுவானதாலே... என்ற எனது கவிதையைப் பிரசுரித்திருந்தமையைக் கண்டு அகமிக மகிழ்ந்தேன். ஆனால் ஒருகுறை. எழுதியவர் அ. மன்னூர்மணி, வஞ்கியன்குளம் என்று பிரசுரிப்பதற்குப் பதிலாக அலஸ் சந்திரபோஸ், வங்காலை என்று பிரசுரித்திருந்தீர்கள். தயவுசெய்து இதனைத் தெளிவுபடுத்தி இனிமேல் இப்படியான தவறு ஏற்படாதவாறு தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தவறுக்கு வருந்துகிறோம்.

— ஆர்

அ. இசைவாணி, ஏழாலை

புது மணம் பரப்பப் பூவுலகில் பூத்திட்ட புது மலராம் புதிய உலகம் இந்தக் குடும்ப நல புத்தாண்டில் ஒரு புதிய யுகத்தை உருவாக்குமென நம்புகின்றேன்.

P. புஸ்பயூடித், ஏழாலை

உமது தொகுப்பையும் நம்புவதற்கில்லை. நடப்பாண்டில் புதிய உலகம் போடுகின்ற ஏறுநடை கண்டால் மட்டுமே எமது மனம் திருப்தியடையும்

ஏழாலை, மே. அ. அந்தோனிமுத்து

இன்றைய சமுதாயப் பிரச்சினைகளை அப்படியே எடுத்துக் காட்டும் சித்திரமாகவே அமைந்துவிட்டது. புதிய உலகம் இது மட்டுமல்ல சிந்தனையைத் தட்டியெழுப்பி, விழிப்புணர்வுடன் புது வழிகாணவும் உதவுகிறது.

A. R. P. நிர்பலன், ஏழாலை

உங்கள் எண்ணமும், செயலும், குறிக்கோளும் உள்ளத்தின் உண்மை நிலையையும் உயர்வையும் எடுத்தியம்புகின்றன.

ஈ. நிர்மலா, ஏழாலை

புரட்சிப் பாதையில் புதுமை காண விழையும் தங்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

ஜொயிஸ் சவிரிமுத்து
மிருசுவில்

கார்த்திகை — மார்கழி புதிய உலகம் ஒளிமலர் ஒளி வீசியது. மறையியல், எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன், இருள் அகன்றது. சிறுகதை, முதலியன நறுமணம் பரப்பியது. குறுக்கெழுத்துப்போட்டி முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை. இவ்விதழின் போட்டி இலகுவாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

## புதுமைப் பதில் :

ஆர். எஸ். செல்வரெட்ணம்
அல்வாய்

எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் எது ?

பிறப்பு !

பகைவர்களைப் பழிவாங்க சிறந்த வழி என்ன?

பழியைவாங்குதல்; பகைவர்கள்மேல் விழவுள்ள பழியை நாம் வாங்கிக்கொள்ளுதல். இது உலக உத்தமர்கள் கையாண்ட வழி.

நோயாளியைப் பார்க்கவரும் நபர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது?

நோயாளியின் உடலுக்கும் உள்ளத்துக்கும் உபத்திரபம் கொடுக்காமல் இருப்பது. நோயாளிக்கு முன்னாலேயே நின்று கொண்டு, இந்த வருத்தம் வந்து இன்னாருக்கு இப்படி நடந்தது என்று தாம் கண்டு கேட்ட அனுபவங்களையெல்லாம் அவிழ்த்துக் கொட்டி அரை நோயாளியை முழுநோயாளி ஆக்கிவிடுவார்கள் எமது ஆட்கள்!

* * *

செல்வி பத்திமா மலர் ஞானப்பிரகாசம்
நாவற்குழி

நாகரிகம் என்று கூறி தற்காலத்தில் தலைக்கு முக்காடு அணியாமல் திருப்பலியிற் பங்கு பற்றும் நங்கையரின் fபாசன் எதிர் காலத்தில் என்னவாகும் ?

தலைக்குமேலே இடும் முக்காடு சுமை என்று நினைக்கின்றார்கள்போலும். தலையில் உள்ள சுமையைக் குறைக்க எண்ணி ஒருவேளை மொட்டையடித்து வந்தாலும் வரக்கூடும், யார்கண்டார்கள்?

## எழுத்தாள அன்பர்களே !

உங்கள் தரமான படைப்புகள் அனைத்தையும் வரவேற்கின்றோம். எமது சஞ்சிகை இரண்டு மாதத்துக்கு ஒன்றாக வெளி வருகின்றது. — ஏராளமான எழுத்தாளர்களின் ஆவலையும் பூர்த்தி செய்ய வேண்டிய கடமை எமக்குள்ளது. எனவே தங்கள் படைப்புகள் அனைத்தையும் சுருக்கமாக ஆகக்கூடியது மூன்று முழுத்தாள்களுக்குள் அடக்கி எழுதி அனுப்புங்கள்.

கவிதைகள் ஒரு பக்கத்துக்குள் அடங்கட்டும். — ஒத்துழைப்பீர்கள் என நம்புகிறோம்.

— ஆசிரிய — நிர்வாகக் குழுவினர்.

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் முதன் முதல் "மோனோரைப்"

காலத்துக்கேற்ற மாற்றம்

அச்சுவேலையில் முன்னேற்றம்

நவீன அச்சு சாதனங்களுடன்

## புனித வளன்
## கத்தோலிக்க அச்சகம்

உங்களை அழைக்கிறது

புத்தகங்கள், சஞ்சிகைகள் துண்டுப் பிரசுரங்கள் எவையாயிருந்தாலும் குறுகிய காலத்தில் அழகு மிளிர அச்சிடலாம்.

360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 300